بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلی علی رسولہ الکریم　　وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 38

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

23 ஸஃபர் 1438 ஹிஜ்ரி கமரி　24 நுபுவ்வத் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி　24 நவம்பர் 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எனக்கு எதிராக தீட்டப்படும் ஒவ்வொரு திட்டத்திலும் இறைவன் எதிரிகளை தோல்வி அடையச் செய்கின்றான். ஆயிரக்கணக்கான தடைகள் இருந்தும் இறைவன் எனது ஜமாஅத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையை பல இலட்சங்களாக ஆக்கி விட்டான். ஆகவே, இது அற்புதம் இல்லையென்றால் வேறு என்ன? இதற்கு இணையான ஒன்று எதிரிகளிடம் இருக்கின்றது என்றால் அதனை அவர்கள் எடுத்து வைக்கட்டும். அது அல்லாமல் லஃனத்துல்லாஹி அலல் காஸிபீன் [பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக] என்று கூறுவதைத் தவிர வேறு என்ன கூற முடியும்? இப்போது நமக்கும் எதிரிகளுக்கும் இடையேயுள்ள சண்டை அதன் இறுதி எல்லையை அடைந்து விட்டது. இப்போது எவன் என்னை அனுப்பினானோ அவன் சுயமே இந்த வழக்கிற்கான தீர்ப்பைக் கூறுவான்**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இந்த விஷயம் குறிப்பிடத்தக்கதாகும். அதாவது, அப்துல் ஹகீம் கான் தன்னைப் போன்ற மற்றவர்களைப் பின்பற்றிச் சென்றவாறு நான் பொய் கூறிக் கொண்டிருந்தேன் என்றும், நான் தஜ்ஜாலாகவும், ஹராமானவற்றை உண்பவனாகவும், நம்பிக்கை துரோகியாகவும் இருக்கின்றேன் என்றும் என் மீது குற்றம் சுமத்தியுள்ளார். மேலும், தனது 'மஸீஹுத் தஜ்ஜால்' என்ற நூலில் எனது பல குறைகளை எடுத்துக் கூறியுள்ளார். மேலும், வயிற்றை வணங்குபவன், நஃப்ஸை வணங்குபவன், கர்வமுள்ளவன், தஜ்ஜால், ஷய்த்தான், அறிவீனன், பைத்தியக்காரன், பொய்யன், சோம்பேறி, ஹராமானவற்றை உண்பவன், உடன்படிக்கையை முறிப்பவன், நம்பிக்கை துரோகி என்று எனக்கு பெயர் வைத்துள்ளார். எனது மற்ற பல குறைகளையும் எடுத்துக் கூறியுள்ளார். அவை அவனது நூலான மஸீஹுத் தஜ்ஜாலில் எழுதப்பட்டிருக்கின்றது. இந்த எல்லா குற்றங்களையும் இதுவரை யூதர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீதும் சுமத்தியுள்ளனர். ஆகவே, இந்த உம்மத்தைச் சார்ந்த யூதர்களும் அதே குற்றங்களைத்தான் என் மீது சுமத்தியுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். ஆனால், நான் இந்த அனைத்து குற்றச்சாட்டுகளுக்கும் ஏச்சுப் பேச்சுகளுக்கும் பதில் கூற விரும்பவில்லை. மாறாக, நான் இந்த எல்லா விஷயங்களையும் இறைவனிடம் ஒப்படைக்கின்றேன். அப்துல் ஹகீமும் அவரது நண்பர்களும் கருதுவது போன்று நான் இருந்தால் பிறகு இறைவனை விட வேறு யார் எனது எதிரியாக இருக்க முடியும் ? இறைவனின் பார்வையில் நான் அப்படிப்பட்டவன் அல்ல என்றால், இந்த விஷயங்களுக்கான பதிலை இறைவனிடம் விட்டு விடுவதையே சிறந்த வழிமுறையாக நான் கருதுகின்றேன். எப்போதும் அல்லாஹ்வின் நடைமுறை இவ்வாறே இருந்து வருகின்றது. ஒரு விஷயத்திற்கான தீர்ப்பை பூமியில் கூற முடியாமல் இருந்தால் அவனது ஒரு தூதர் தொடர்பான அந்த விவகாரத்தை தனது கைகளில் அவன் எடுத்துக் கொள்கின்றான். அவனே அது பற்றிய தீர்ப்பை வழங்குகின்றான். எதிரிகளில் எவராவது சிந்தனை செய்தால் அவர்களது குற்றச்சாட்டுகளில் இருந்து கூட எனது அற்புதமே நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. ஏனென்றால், ஒருபுறம் இருபத்தைந்து வருட காலக்கட்டமாக நான் இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறுகின்ற அநியாயக்காரனாகவும் தீங்கு விளைவிக்கும் மனிதனாகவும் இரவில் என் தரப்பிலிருந்து ஓரிரு வார்த்தைகளை உருவாக்கி விட்டு காலையில் இது இறைவனின் இல்ஹாமாகும் என்று கூறுபவனாகவும் நான் இருக்கின்றேன். மறுபுறம் இறைவனின் படைப்பினங்கள் மீது நான் இந்த அநீதியை இழைத்திருக்கின்றேன். அதாவது, நேர்மையற்ற முறையில் ஆயிரக்கணக்கான ரூபாய்களைத் தின்று விட்டேன். உடன்படிக்கையை முறிப்பவனாக இருந்தேன். பொய் பேசுகின்றேன். என்னை வணங்குவதற்காக அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றேன். உலகிலுள்ள எல்லா குறைகளையும் தன்னகத்தே கொண்டவனாக நான் இருக்கின்றேன். பிறகும் கூட இறைவனின் கோபத்திற்குப் பகரமாக அவனது அருள் என் மீது இறங்குகின்றது. எனக்கு எதிராக செய்யப்படும் ஒவ்வொரு திட்டத்திலும் எதிரிகளை இறைவன் தோல்வி அடையச் செய்கின்றான். நான் செய்த அந்த ஆயிரக்கணக்கான பாவங்கள், இட்டுக்கட்டி கூறிய பொய்கள், இழைத்த அநீதி, ஹராமானவற்றைச் சாப்பிட்டது ஆகியவற்றின் காரணமாக என் மீது இடியும் விழவில்லை. பூமியில் நான் புதையுண்டு போகவுமில்லை. மாறாக, எல்லா எதிரிகளுக்கும் எதிரில் எனக்கு உதவி கிடைக்கின்றது. அவர்கள் பல தாக்குதல்கள் நடத்திய பிறகும் நான் காப்பாற்றப்பட்டுள்ளேன்.★ ஆயிரக்கணக்கான தடைகள் இருந்தும் இறைவன் எனது ஜமாஅத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையை பல இலட்சங்களாக ஆக்கி விட்டான். ஆகவே, இது அற்புதம் இல்லையென்றால் வேறு என்ன ? இதற்கு இணையான ஒன்று எதிரிகளிடம் இருக்கின்றது என்றால் அதனை அவர்கள் எடுத்து வைக்கட்டும். அது அல்லாமல் லஃனத்துல்லாஹி அலல் காஸிபீன் (பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக) என்று கூறுவதைத் தவிர வேறு என்ன கூற முடியும்? இருபத்தைந்து வருடங்களாக இட்டுக்கட்டி பொய் கூறிய பிறகும் கூட இட்டுக்கட்டி பொய் கூறி வந்த இந்தக் காலக்கட்டத்தில் அவருக்கு ஆதரவாகவும் இறைவனின் உதவியாகவும் நூற்றுக்கணக்கான அடையாளங்கள் தரப்பட்டிருக்கின்ற, எதிரிகளின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் காப்பாற்றப்பட்டிருக்கின்ற ஒருவரை இவர்களால் கொண்டு வந்து காட்ட முடியுமா ? فَأْتُوا بِهَا إِنْ كُنْتُمْ صَادِقِيْنَ

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

★ டெபுடி கமிஷனரான கேப்டன் டக்லஸ் அவர்களின் நீதிமன்றத்தில் எனக்கு எதிராக நான் கொலை செய்ய முயற்சி செய்ததாக வழக்கு தொடரப்பட்டது. நான் அதிலிருந்து காப்பாற்றப் -பட்டேன். இன்னும் சொல்வதென்றால், நான் குற்றமற்றவனாக விடுவிக்கப்படுவது பற்றிய தகவல் முதலிலேயே எனக்கு தெரிவிக்கப்பட்டது. தபால் துறையின் சட்டத்திற்கு எதிராக செய்யப்பட்டதாக என் மீது வழக்கு தொடரப்பட்டது. அதற்கான தண்டனை ஆறு மாத கால சிறை தண்டனையாகும். இதிலிருந்தும் கூட நான் காப்பாற்றப்பட்டேன். இந்த வழக்கிலிருந்து குற்றமற்றவனாக நான் விடுதலை செய்யப்படும் செய்தி முதலிலேயே எனக்கு தெரிவிக்கப்பட்டது. இவ்வாறே டெபுடி கமிஷனரான மிஸ்டர் டூயி அவர்களின் அலுவலகத்தில் எனக்கு எதிராக ஓர் இராணுவ வழக்கு தொடரப்பட்டது. இறுதியில் அதிலிருந்து கூட இறைவன் எனக்கு விடுதலையை வழங்கினான். எதிரிகள் தமது நோக்கத்தில் தோல்வியடைந்தனர். நான் விடுதலையடைவது தொடர்பாக முதலிலேயே எனக்கு தெரிவிக்கப்பட்டது. பிறகு கரம்தீன் என்ற ஒரு நபர் ஜெஹ்லமில் உள்ள சன்ஸார் சன்த் என்ற பெயரிலுள்ள மாஜிஸ்ட்ரேட்டின் நீதிமன்றத்தில் என் மீது ஓர் இராணுவ வழக்கைத் தொடுத்தார். அந்த வழக்கிலிருந்தும் குற்றமற்றவனாக நான் விடுதலை செய்யப்பட்டேன். நான் விடுதலை செய்யப்படுவது தொடர்பான செய்தியை இறைவன் எனக்கு முதலிலேயே தெரிவித்து விட்டான். பிறகு இதே கரம்தீன் குர்தாஸ்பூரில் எனக்கு எதிராக ஓர் இராணுவ வழக்கைத் தொடுத்துள்ளார். இந்த வழக்கிலிருந்து கூட நான் குற்றமற்றவனாக விடுதலை செய்யப்பட்டேன். நான் விடுதலை அடைவது தொடர்பான செய்தியை முதலிலேயே இறைவன் எனக்கு தெரிவித்து விட்டான். இவ்வாறு எனது எதிரிகள் என் மீது எட்டு தாக்குதல்களைத் தொடுத்தனர். அந்த எட்டு வழக்கிலும் அவர்கள் தோல்வி அடைந்தனர். இன்றிலிருந்து 25 வருடங்களுக்கு முன்னால் பராஹீனே அஹ்மதிய்யாவில் எழுதப்பட்டிருந்த இறைவனின் முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது. அதாவது, يَنْصُرُكَ اللّٰهُ فِي مَوَاطِنَ (அல்லாஹ் பல நேரங்களில் உமக்கு உதவுவான்) என்பதே அந்த முன்னறிவிப்பாகும். என்ன ? இது அற்புதம் இல்லையா ?

# ஜுமுஆ பேருரை

**எந்த மனிதர் இவ்வுலகிற்கு வந்தாலும் அவர் இந்த உலகை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டியதுள்ளது. ஆனால், மார்க்கத்திற்கு தொண்டு செய்யும் வாய்ப்பை அல்லாஹ்வால் வழங்கப்பட்டவரும், மனித குலத்திற்கு தொண்டு செய்யும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றவரும் நற்பேறு பெற்றவர்கள் ஆவர்.**

**நீண்ட காலம் ஜமாஅத்திற்கு தொண்டு செய்து வந்த முபல்லிக் மதிப்பிற்குரிய பஷீர் அஹ்மது ரஃபீக் கான் சாஹிப் மற்றும் வாழ்வை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்திருந்த ரப்வாவிலுள்ள ஃபஸ்ல் உமர் மருத்துவமனையின் மருத்துவரான மதிப்பிற்குரிய மர்ஹூம் மவ்லானா அப்துல் மாலிக் கான் சாஹிப் அவர்களின் மகளான மதிப்பிற்குரிய டாக்டர் ஜஸ்ரத் ஜஹான் சாஹிபா ஆகியோர் வஃபாத் ஆகி விட்டனர். மர்ஹூமீன்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **கனடாவின் Toronto -விலுள்ள பைத்துல் இஸ்லாம் பள்ளிவாயிலில் 21 அக்டோபர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **இஹா** மாதம் **21 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

இன்று நான் ஜமாஅத்தின் இரு சேவகர்கள் பற்றி குறிப்பிடுவேன். அவர்கள் கடந்த சில நாட்களுக்கு முன் வஃபாத் ஆகி விட்டார்கள். அவர்களுள் ஒருவர் பஷீர் அஹ்மது ரஃபீக் சாஹிப், இன்னொருவர் ஃபஸ்லே உமர் மருத்துவமனையின் மகப்பேறு துறையின் டாக்டர் நுஸ்ரத் ஜஹாக் சாஹிபா ஆவார்கள்.

எந்த மனிதர் இவ்வுலகிற்கு வந்தாலும் அவர் இந்த உலகை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டியதுள்ளது. ஆனால், மார்க்கத்திற்கு தொண்டு செய்யும் வாய்ப்பை அல்லாஹ்வால் வழங்கப்பட்டவரும், மனித குலத்திற்கு தொண்டு செய்யும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றவரும் நற்பேறு பெற்றவர்கள் ஆவர். பஷீர் ரஃபீக் கான் சாஹிப் அவர்கள் பழைய ஊழியரும் ஜமாஅத் முபல்லிக்கும், பல்வேறு நிர்வாகப் பணிகளில் நியமிக்கப்பட்டவரும் ஆவார். மிகவும் களங்கமற்ற முறையில் பணியைச் செய்து வந்தார். இவர் 11 அக்டோபர் 2016 அன்று சுமார் 85 வயதில் இலண்டனில் மரணம் அடைந்தார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர் பஞ்சாப் யுனிவர்சிட்டியில் பி.ஏ படித்தார். ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீனிலும் 1958 –ல் ஒருவேளை ஷாஹித் பட்டம் பெற்றிருக்கலாம். இந்தக் குடும்பம் பழைய அஹ்மதி குடும்பமாகும். இவரது தாயார் ஃபாத்திமா பீபி. இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியான ஹஸ்ரத் மவ்லவி முஹம்மது இல்யாஸ் கான் சாஹிபின் மூத்த மகள் ஆவார்கள். இவரது தந்தையார் பெயர் தானிஷ்மந்த் கான் சாஹிப். இவர் ஏறத்தாழ 1890 –ல் பிறந்தவர். கனவு மற்றும் ஆன்மீகக் காட்சிகளைப் பெறும் மனிதராக இருந்தார்கள். பஷீர் ரஃபீக் கான் சாஹிப் பிறப்பு அஹ்மதியாக இருந்தார். இவரது தந்தை 1921 –ல் அஹ்மதிய்யத்தை ஏற்றிருந்தார். இதனால் இவரது ஊர்க்காரர்கள் இவரை ஊரை விட்டு விலக்கி வைத்திருந்தார்கள். இவரது தந்தையாரை குறித்து நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ரஃபீக் கான் சாஹிபிற்கு எழுதியிருந்தார்கள். உங்களது கடிதம் எப்போதும் உங்களது சான்றோராகிய உமது தந்தையாரை நினைவுபடுத்தி அவர்களுக்காக துஆ செய்ய வைக்கிறது என்று அதில் குறிப்பிட்டார்கள். சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு இல்லாமலும், களங்கமற்ற தூய்மையின் தலையூற்றாகவும் அன்னார் விளங்கினார்கள். இதுவே ஓர் அஹ்மதியின் சிறப்புத் தன்மையின் அடையாளமாகும்.

அவர்கள் எழுதுகின்றார்கள்: அவருடன் எனக்கு ஆழிய தொடர்பு இருந்தது. அது பல்வேறு நிலைகளில் துஆவின் வாயிலாக வெளிப்படவும் செய்கிறது. அல்லாஹ் அவர்களுக்கும் கருணை காட்டுவானாக! அவரது சந்ததிகளையும் அவரது உண்மையான வாரிசாக்குவானாக! இவரது திருமணம் 1956 –ல் அப்துர் ரஹ்மான் கான் சாஹிபின் மகளான சலீமா நாஹீது சாஹிபா அவர்களுடன் நடந்தது. இவர்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியான கான் அமீருல்லாஹ் கான் சாஹிபுடைய மகனாக இருந்தார்கள். இவரது சந்ததிகளுள் மூன்று மகன்களும் மூன்று மகள்களும் இருக்கிறார்கள். 1945 –ல் கான் சாஹிப் காதியான் தஃலீமுல் இஸ்லாம் மேல்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். அப்போது அவரது வயது 14 ஆக இருந்தது. அந்நாட்களில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 'இளைஞர்கள் தமது வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும்' என்பது குறித்து பேசினார்கள். இந்த வகையில் அந்த ஜுமுஆ முடிந்ததுமே பல இளைஞர்கள் தமது பெயரைக் கொடுத்தார்கள். அத்தகைய பேறு பெற்ற இளைஞர்களுள் இவரும் அடங்கியிருந்தார். அதற்குப் பிறகு அக்காலத்தில் இப்போது போன்ற ஏற்பாடு இருந்ததில்லை. உங்கள் வக்ஃப் (அர்ப்பணிப்பு) ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களால் எழுதப்பட்ட கடிதம் இவர்களுக்கு கிடைத்தது. 1947 –ல் இந்தியா பாகிஸ்தான் பிரிவினை நடக்கும் வரை இவரது படிப்பு காதியானில் தொடர்ந்தது. மெட்ரிக் முடித்த பிறகு அல்லது அதற்கு சில காலம் முன்பு, தான் இருந்து வந்த பகுதிக்குச் சென்று விட்டார்கள். கல்லூரியில் அனுமதி பெற்றவுடன் திடீரென்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது தனிச்செயலரின் கடிதம் கிடைத்தது. அதில் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியிருந்தார்கள். காதியானின் ஒரு பட்டான் மாணவர் தமது வாழ்வை அர்ப்பணித்திருந்தார். ஆனால், இப்போது அவரது பெயர் என்னவென்று தெரியவில்லை. நாடு பிரிவினையின் காரணமாக ரிக்கார்டுகளும் தொலைந்து விட்டன அல்லது அதனை தெரிந்து கொள்ள ரப்வாவில் ரிக்கார்டு இல்லை. 1945 –ல் படித்த அந்த மாணவர் யார்? எப்போது வக்ஃப் செய்தவர் என்பதை தெரிந்து கொள்வதற்கு ரிக்கார்டுகள் இல்லை என்று தற்செயலாக அவர்களது வீட்டிற்கு கடிதம் வந்தது. 'நான்தான்' என்று இவர் பதில் எழுதி இருந்தார். இந்த வகையில் உடனே ரப்வாவிற்கு வருமாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதினார்கள். லாஹூர் தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் பி.ஏ படிப்பதற்காக சேருமாறு குறிப்பிட்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அங்கு கல்லூரி முதல்வராக இருந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: 1953 –ல் தேர்வுக்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது திடீரென்று அஹ்மதிய்யா எதிர்ப்பு குழப்பங்கள் வெடித்தன. இதே நிலையில் இவர் தேர்வையும் எழுதினார். இந்தத் தேர்வின் முடிவுகள் வெளியானபோது எனக்கு மிகவும் பேரதிர்ச்சி ஏற்பட்டது. நான் தேர்ச்சி பெறவில்லை என்று கூறுகிறார். நான் தேர்ச்சி பெறமாட்டேன் என்றிருக்கும் போது தேர்வுக்கு முன்னரே இறைவன் எனக்கு ஏன் வினாத்தாள்களைக் காட்டினான்? அவ்வாறே அது தேர்வில் வரவும் செய்தது. மேலும் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் மிகவும் உறுதியாக நீங்கள் தேர்வில் தேர்ச்சி பெறுவீர்கள் என்று கூறியிருந்தார்கள். எனவே எனது ஈமான் இவற்றினால் சற்று அசையத் தொடங்கியது. பத்திரிகைகளில் தேர்வு முடிவுகள் வந்தன. நான் மிகவும் வருத்தத்துடன் அமர்ந்திருந்தேன். எனது தந்தையார் என்ன காரணம் என்று கேட்டார். நான் காரணத்தைக் கூறினேன். பரவாயில்லை. மீண்டும் தேர்வு எழுது. ஏனெனில், பஞ்சாபின் குழப்பங்கள் காரணமாக நீ தேர்வுக்காக சரியாக ஆயத்தம் செய்திருக்கமாட்டாய் என்றார். சில நாட்கள் கழிந்தன. தந்தையார், நான் எப்போது துஆ செய்தாலும் எனக்கு பஷீர் அஹ்மது தேர்ச்சி பெற்று விட்டான் என்ற குரலே கேட்கிறது என்று கூறினார்கள். பிறகு கல்லூரியின் தேர்வு முடிவைக் காட்டிய போது அமைதியாகி விட்டார். சில நாட்கள் கழிந்தன. பிறகும் கூட நீர் தேர்ச்சி பெற்று விட்டீர் என்றுதான் எனக்கு பதில் வருகிறது என்று கூறினார்.

அவர் கூறுகிறார்: ஒருநாள் தற்செயலாக தபாலில் நிறைய கடிதங்கள் வந்தன. அதில் ஒரு கடிதம் பல்கலைக்கழகத்தின் தரப்பிலிருந்து வந்திருந்தது. நான் திறந்து பார்த்தபோது வியந்துபோய் விட்டேன். பல்கலைக்கழகம் கூறியிருந்தது. தவறுதலாக நீர் ஃபெயில் ஆக்கப்பட்டு விட்டீர். விடைத்தாள்களை மீண்டும் சரிபார்த்த போது நீங்கள் பாஸ் ஆக்கப்பட்டுள்ளீர்கள் என்று கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. கூறுகிறார்: சில நாட்களுக்குப் பிறகு நான் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் சென்ற போது ஹுஸூரிடம் எல்லா விஷயங்களையும் கூறினேன்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: துஆ செய்த பிறகு தான் நீர் தேர்ச்சி பெறுவது பற்றி எனக்கு செய்தி தெரிவிக்கப் –பட்டிருந்தது. நீர் தேர்ச்சி பெறுவீர் என்று நான் உமக்கு தகவல் தெரிவித்தும் விட்டேன். பிறகு முடிவுகள் வந்தது. இறைவனது வார்த்தையை எவர் தடுக்க முடியும்? Result வேறு விதமாக இருந்திருந்தால் அல்லாஹ் முடிவு செய்து கூறியது வெறும் நகைப்பிற்குரியதாகி விடும். அல்லாஹ் கலீஃபத்துல் மஸீஹிற்கும் அவருடைய தந்தையாருக்கும் என்ன விஷயத்தைக் கூறினானோ அதுவே சரியானது என்று நிரூபணமானது. அதற்குப் பிறகு ஜாமிஆ அஹ்மதிய்யாவில் நுழையுமாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள். பட்டம் பெறுங்கள். தப்லீக் மைதானத்தில் உங்களை அனுப்ப வேண்டும் என்பது எனது விருப்பமாகும் என்றார்கள்.

அவர் கூறுகிறார்: எனது வகுப்பிற்கு ஒரு சிறப்பான கவுரவமும் கிடைத்திருந்தது. ஜாமிஆவுக்கு இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் சிலமுறை

வந்திருந்தார்கள். பல்வேறு கல்விகளில் திறன் பெறுவதற்கான வழிமுறைகளைப் பற்றி கவனமூட்டியும் வந்தார்கள். ஒவ்வொரு மாணவரும் ஒரு நூலகம் உருவாக்க வேண்டும். நூல்கள் வாங்கும் வழக்கத்தை உருவாக்க வேண்டும் என்று இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் சிறப்பாக கவனமூட்டினார்கள். இது ஒவ்வொரு ஜாமிஆ மாணவரும் நினைவில் கொள்ள வேண்டிய விஷயமாகும். உலகிலுள்ள எல்லா ஜாமிஆ மாணவர்களும் வாழ்க்கையை எங்கு அவர்கள் அர்ப்பணித்தாலும் தமக்கென ஒரு நூலகம் உருவாக்க வேண்டும். கடந்த நாட்களில் முரப்பிகளின் கூட்டம் இருந்தது. அங்கும் நான் அவர்களிடம் இதனைக் கூறினேன். முரப்பிமார்களுக்கென்று சொந்த நூலகம் இருக்க வேண்டும். ஜமாஅத் நூலகத்தை மட்டுமே சார்ந்திருக்கக் கூடாது.

அவர்கள் கூறுகிறார்கள்: ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீன் –லிருந்து ஷாஹித் பட்டம் பெற்று வகாலத்துத் தப்ஷீரில் வந்து விட்டேன். மிர்ஸா முபாரக் அஹ்மது சாஹிப் வகீலுத் தப்ஷீர் ஆக இருந்தார்கள். அவர்கள் என்னை இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் அழைத்துச் சென்றார்கள். அன்னார் கூறினார்கள்: இவரை பிரிட்டனுக்கு அனுப்ப வேண்டும். பிறகு கூறுகிறார்கள்: பிரிட்டனுக்கு செல்வதற்காக வகீலுத் தப்ஷீர் அவர்கள் என்னை இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் அழைத்துச் சென்றார். அவர்களிடமிருந்து விரிவான வழிகாட்டல்களை எழுதி வாங்கிக் கொண்டார். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் துஆ செய்து விடை கொடுத்தார்கள். கட்டித் தழுவினார்கள். இவர் 1959 –ல் பிரிட்டன் சென்றடைந்தார். அங்கு முபல்லிக்காக நியமிக்கப்பட்டார். இலண்டனில் மஸ்ஜித் ஃபஸ்லில் நாயிப் இமாம் ஆக தமது சேவையைத் தொடங்கினார்.

அவர் கூறுகிறார்: 1959 –ல் பிரிட்டனுக்கு செல்ல புறப்படும்போது மவ்லானா ஜலாலுத்தீன் ஷம்ஸ் சாஹிப் அவர்களிடம் சென்று சிறு அறிவுரைகள் வழங்குமாறு விண்ணப்பித்தார்கள். மவ்லானா ஜலாலுத்தீன் ஷம்ஸ் சாஹிப் அவர்கள் மிக நீண்ட காலம் மஸ்ஜித் ஃபஸ்ல் இலண்டனில் இமாம் ஆக இருந்தார்கள். அன்னார் கூறினார்கள்: நான் உமக்கு ஓர் அறிவுரை ஒன்று தருகிறேன் என்றார்கள். நான் அதிலிருந்து என் வாழ்வின் பெரும் பயனடைந்தேன்.

ஷம்ஸ் சாஹிப் கூறினார்கள்: நான் சிரியா நாட்டில் முபல்லிக் ஆக இருந்தேன். என் மூலமாக வசதியான குடும்பத்தைச் சார்ந்த ஒரு நபர் முனீருல் ஹஸ்னி சாஹிப் பைஅத் செய்தார். இவரும் பழைய களங்கமற்ற அஹ்மதியாக இருந்தார். அதன் பிறகு சிரியாவில் ஜமாஅத் பரவியது.

அவர் கூறுகிறார்: நாளுக்கு நாள் அவரது உணர்வும் எழுச்சியும் வளர்ந்தது. முனீருல் ஹுஸ்னி சாஹிப் தினமும் அஸருக்குப் பிறகு மிஷன் ஹவுஸிற்கு வருவார். அப்போது சிரியாவில் மிஷன் ஹவுஸ் இருந்தது. அப்போது கட்டுப்பாடுகள் இருந்ததில்லை.

ஷம்ஸ் சாஹிப் கூறுகிறார்: அவர் எனக்காக மிகவும் ஆர்வத்துடன் உணவு தயாரிப்பார். என்னை மிகவும் வற்புறுத்துவார். நாங்கள் இருவரும் உணவு உண்போம். நான் முனீருல் ஹஸ்னி சாஹிபிடம் இன்று குழம்பில் உப்பு அதிகமாகி விட்டது என்று கூறினேன். இனி எச்சரிக்கையாக இருங்கள் என்றேன். முனீருல் ஹஸ்னி சாஹிப் சிறிது நேரம் அமைதியாக இருந்தார். பிறகு கூறினார்: மவ்லானா சாஹிப் உங்களுக்கு தெரியும். எனது வீட்டில் பணி செய்வதற்கு பல ஊழியர்கள் இருக்கிறார்கள். இவர் பெரும் செல்வந்தர். எந்த அளவுக்கு என்றால் நான் வீட்டிற்குச் சென்றால் ஊழியர் வந்து எனது Shoe –வில் உள்ள கயிறுகளை அவிழ்த்து விடுவார். எனது வீட்டில் நான் ஒரு கோப்பை தேநீர் கூட நானாக தயாரித்ததில்லை. நான் இங்கு வந்து உங்களுக்காக உணவு தயாரிக்கிறேன் என்றால் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவே செய்கிறேன். பிறகு நான் எங்கே குழம்பு தயார் செய்வது? எனது குழம்பு தயாரிப்பில் மசாலா குறைவாகவோ அதிகமாகவோ ஆகி விட்டால் தவறு நேர்ந்து விட்டால் மன்னித்துக் கொள்ளுங்கள். சமையல் செய்வது என் பணியல்ல என்று கூறினார்.

இந்த சம்பவத்தைக் கூறி விட்டு மவ்லவி ஷம்ஸ் சாஹிப் கூறினார்கள்: இந்த சம்பவத்திலிருந்து நான் கற்ற பாடமாவது, முபல்லிக்மார்களுக்கு அன்பர்கள் மகிழ்ச்சியுடன் சேவை செய்யும்போது நமக்காக செய்யவில்லை. அல்லாஹ்வின் திருப்திக்காகவும் அஹ்மதிய்யா இயக்கத்தின் மீதுள்ள அன்பினாலும் மட்டுமே செய்கிறார்கள். எனவே, இதனை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் எவ்வளவு சேவை செய்தாலும் அது நம் மீது சாட்டப்பட்ட கருணையாகும். அதில் தவறு நிகழ்ந்தால் அதனை குறை கூற நமக்கு உரிமையில்லை என்பதே அந்தப் பாடமாகும்.

எவ்வாறிருப்பினும், மிக அதிகமான பற்றால் நிறைந்த மக்களை அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்திற்கு வழங்கியுள்ளான். அவர்கள் ஆரம்பத்திலிருந்து இதுவரை வந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

அவர் கூறுகிறார்: 1964 –ல் கண்ணியத்திற்குரிய சவுத்ரி ரஹ்மத் கான் சாஹிப் இலண்டன் பள்ளிவாயிலின் இமாம் ஆக இருந்தார்கள். அன்னார் நோயினால் திரும்பிச் சென்றார்கள். அப்போது இவர்கள் மஸ்ஜித் ஃபஸ்ல் பள்ளிவாயிலின் இமாம் ஆக நியமிக்கப்பட்டார்கள். 1960 –ல் பஷீர் ரஃபீக் சாஹிப் ‘முஸ்லிம் ஹெரால்டு’ என்ற ஆங்கிலப் பத்திரிகையைத் தொடங்கினார்கள். முதலில் அது 10 பக்கங்களைக் கொண்டதாக இருந்தது. அவரே ஆசிரியராகவும் இருந்தார். பிற வேலைகளையும் தாமே செய்து வந்தார். 1962 –ல் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிபின் தூண்டுதலுக்கேற்ப அக்பாரே அஹ்மதிய்யா என்ற பெயரில் 15 நாள் பத்திரிகை ஒன்றை தொடங்கினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்தப் பத்திரிகை தொடங்கியவனும் நான்தான். நீண்ட காலமாக அதன் ஆசிரியராக இருக்கும் வாய்ப்பும் பெற்றேன். தொடர்ந்து முறைப்படி அதில் கட்டுரைகள் எழுதும் வாய்ப்பும் கிடைத்தது. மிகப் பெரும் அறிவு படைத்த மனிதராக இருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடங்கிய Review of Religion –ன் ஆசிரியராக இருக்கும் கண்ணியம் இவருக்கு கிடைத்திருந்தது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் 1967 –ல் இருந்து தமது கிலாஃபத் காலத்தில் ஐரோப்பாவிற்கு எட்டு முறை சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்கள். அவற்றுள் ஏழு சுற்றுப் பயணங்களில் மவ்லானா பஷீர் ரஃபீக் சாஹிப் அவர்கள் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் பயணக் குழுவில் இடம் பெற்றிருந்தார். இருமுறை சுற்றுப் பயணத்தின் பிரஸ் செயலராகவும் பணி செய்யும் வாய்ப்பு பெற்றார். 1970 –ல் பாகிஸ்தான் திரும்பி வந்தபோது மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹின் தனிச்செயலராக நியமிக்கப்பட்டார். 1971 –ல் மீண்டும் இலண்டன் வந்தார். இமாமாக தமது பணியை மீண்டும் தொடர்ந்தார். 1976 –ல் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடன் அவர்களது தனிச்செயலராக அமெரிக்கா, கனடா, சுற்றுப் பயணங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார். 1978 –ல் மே மாதம் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் சிலுவையிலிருந்து விடுதலை என்ற சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலண்டன் சென்றிருந்தபோது அதன் ஏற்பாடுகளை முழுமையாகச் செய்வதற்காக அன்னார் பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மக்களுடன் சேர்ந்து இரவும் பகலும் ஒன்றாக்கி பிரிட்டனின் ஜமாஅத் செயற்குழுவின் பணியாற்றினார்கள். Team Work –ன் மிக உயரிய முன்மாதிரியைக் காட்டினார்கள். இது இவரது ஒரு மகத்தான பணியாக இருந்தது. 1964–70 பிறகு 1971–79 வரை மஸ்ஜித் இலண்டனின் இமாம் ஆக இருந்தார்கள். ‘முஸ்லிம் ஹெரால்டு’ பத்திரிகையின் நிறுவுனர் மற்றும் ஆசிரியராக 1961–79 வரையும், மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹின் தனிச் செயலராக 1970–71 வரையும் இருந்தார்கள். பிறகு நவம்பர் 1985 –ல் வகீலுத் தீவான் தஹ்ரீகே ஜதீத் ஆக நியமிக்கப்பட்டார்கள். 1982–83 வரை ரப்வாவின் வகீலுத் தப்ஷீர் ஆகவும், 1983–84 வரை ரப்வாவின் கூடுதல் வகீலுத் தப்ஸீர் ஆகவும், 1987–97 வரை இலண்டனின் கூடுதல் வகீலுத் தஸ்னீஃப் ஆகவும், 1983–85 வரை எடிட்டர் Review of Religions –ஆகவும், 1988–95 வரை Chairman Board of Review of Religions –ஆகவும், 1971–85 வரை சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் உறுப்பினராகவும், 1971–73 வரை மார்க்கத் தீர்ப்பு வழங்கும் கமிட்டியின் உறுப்பினரகாவும், 1984–87 வரை கஸா போர்டின் உறுப்பினராகவும் இருந்தார்கள்.

இவை தவிர சில உலகியல் தொண்டுகள் செய்யும் வாய்ப்பும் இவருக்கு கிடைத்திருந்தது. வாண்டு ஸோர்த் ரோட்டரி கிளப்பின் உறுப்பினர் மற்றும் Vice President –ஆகவும், பிறகு ரோட்டரி கிளப்பின் President –ஆகவும் நியமிக்கப்பட்டார். 1968 –ல் லைபீரிய நாட்டின் அதிபர் ஜனாப் டப் மேனின் சிறப்பு அழைப்பின் பேரின் லைபீரியா சென்றார். லைபீரியாவின் சிறப்பு விருந்தினராகவும் போற்றப்பட்டார்.

இவரது மகன் எழுதுகிறார்: மிகவும் முறையாக தஹஜ்ஜுத் தொழுது வந்தார். மிகவும் கவனத்துடன் துஆ செய்வார். எவரது பெயரும் மறந்து விடக் கூடாது என்பதற்காக அவரது பெயரைச் சொல்லி துஆ செய்வார். அதிகமதிகமாக தருது ஓதுபவரும், சந்தாவைப் பற்றி எங்களுக்கு அதிமகாக தெளிவுபடுத்துபவருமாக இருந்தார். இவரது சகோதரர் கர்னல் நஸீர் இவரது வாழ்க்கை சம்பவங்களை எழுதியுள்ளார். அதனை நான் சுருக்கமாக கூறினேன். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அவரை அழைத்த போது இவர் சட்டக் கல்லூரியில் சேர்ந்திருந்தார். இவரது தந்தையாருக்கு கலீஃபத்துல் மஸீஹிடமிருந்து இவரை அனுப்புமாறு கடிதம் வந்த போது நான் வக்கீலுக்கு படித்து விட்டு ஜமாஅத்திற்கு மிகச் சிறந்த தொண்டு செய்ய முடியும் என்று கூறினார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அதற்குப் பதிலாக நமக்கு மார்க்க வக்கீல்கள் தேவை. உலகியல் வக்கீல் அல்ல. உலகியல் பதவியையும் செல்வத்தையும் உலகில் பார்க்க விரும்பினால் அவை அனைத்தையும் அல்லாஹ் உமக்கு வக்ஃபின் பரக்கத்தினால் வழங்குவான் என்று எழுதினார்கள்.

அவர் கூறுகிறார்: தந்தையார் அக்கடிதத்தை என் சகோதரரிடம் கொடுத்த போது எந்தக் கேள்வியும் கேட்காமல் கடிதத்தைப் படித்ததும் தமது பொருள்களை எடுத்துக் கொண்டு ரப்வாவிற்கு போய் விட்டார். பிறகு அல்லாஹ் எவ்வாறு அந்த வார்த்தையைக் கூட நிறைவேற்றினான் என்று பாருங்கள். வக்கீலாகி இருந்தால் உலகியல் வக்கீலாக மட்டுமே இருப்பார். பிறகு அவருக்கு உலகியல் கண்ணியமும் கிடைத்தது. மார்க்க சேவைக்கான வாய்ப்பும் கிடைத்தது.

இவரது சகோதரர் எழுதுகிறார்: இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் கூறிய அனைத்தும் இவருக்கு வக்ஃபின் பரக்கத்தால் கிடைத்தது. பதவியும் கிடைத்தது. கண்ணியமும் கிடைத்தது. பிரபல்யம் கிடைத்தது. இவையெல்லாம் கிடைத்தன. அல்லாஹ்வின் அருளால் முழுமையான வாழ்வைப் பெற்றார்கள். கிலாஃபத்துடன் இவருக்கு மிகவும் நன்றியுணர்வுள்ள தொடர்பிருந்தது. இவருக்கு இருதய பிரச்னை இருந்தது. இருதய அறுவை சிகிச்சையும் நடந்தது. முற்றிலும் நம்பிக்கையில்லாத நிலை ஏற்பட்டது. அல்லாஹ் பிறகு புதிய வாழ்வை வழங்கினான். இந்த நோயினால் மிகவும் பலவீனம் ஏற்பட்டது. மிகவும் முறையாக எனக்கு கடிதம் எழுதி வந்தார். தனது பற்றையும் களங்கமின்மையையும் வெளிப்படுத்தி வந்தார். எங்கெல்லாம் எந்த விழாக்களில் நான் கலந்து கொள்வதாக அவருக்கு தெரிய வந்தாலும் அங்கு கண்டிப்பாக வந்து விடுவார். பிறகு Walker வைத்துக் கொண்டு எப்படியாவது ஜுமுஆவுக்கு கண்டிப்பாக வந்து

கலந்து கொள்வதைப் பார்த்துள்ளேன். நடந்து வருவார்கள். அல்லாஹ் இவருக்கு மஃபிரத் மற்றும் ரஹ்மத்தின் நடைமுறையைக் காட்டுவானாக! இவரது தகுதியை உயர்த்துவானாக! இவரது சந்ததிகளுக்கும் களங்கமின்மை மற்றும் பற்றுடன் ஜமாஅத்துடன் தொடர்பு வைக்கவும் அவரை அடியொற்றி நடக்கவும் வாய்ப்பினை வழங்குவானாக!

நான் குறிப்பிட்டது போன்று இரண்டாவது ஜனாஸா கண்ணியத்திற்குரிய நுஸ்ரத் ஜஹான் மாலிக் சாஹிபா உடையதாகும். இவர் மவ்லானா அப்துல் மாலிக் கான் சாஹிபுடைய மகளாக இருந்தார். 11 அக்டோபர் 2016 அன்று இலண்டனில் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்கள் ரப்வாவில் இருந்தார்கள். ஆனால், பிரிட்டன் நேஷனல் ஆக இருந்தார்கள். ஒவ்வொரு வருடமும் வருவார். தமது தொழில் திறமையை வளர்ப்பதற்காகவும் பல்வேறு மருத்துவமனைகளுக்குச் செல்வார். சில காலமாக நோயுற்றிருந்தார். சிகிச்சையும் பெற்று வந்தார். எனவே இங்கிருந்தார். யூ.கே மாநாட்டிற்குப் பிறகு இவருக்கு திடீரென Infection ஆனது. Chest Infection ஆனது. வளர்ந்து கொண்டே சென்றது. நுரையீரல் வேலை செய்வதை நிறுத்தி விட்டது. ஆனால், அல்லாஹ் அருள் புரிந்தான். கணிசமான குணம் கிடைத்தது. டாக்டர்கள் மிகவும் நம்பிக்கையுடன் இருந்தனர். மீண்டும் Infection ஏற்பட்டால் தப்பிப்பது கடினம் என்ற ஆபத்தும் உடன் இருந்தது. அல்லாஹ்வின் நியதியாக இருந்தது. ஒருநாள் திடீரென்று தாக்குதல் ஏற்பட்டது. நோயுற்ற சில மணி நேரத்திற்குள் வஃபாத் நிகழ்ந்தது.

இவர் 15 அக்டோபர் 1951 –ல் கராச்சியில் பிறந்தார். டாக்டர் நுஸ்ரத் ஜஹான் சாஹிபா உடைய தந்தையார் அப்துல் மாலிக் கான் சாஹிப் பழைய ஜமாஅத் தொண்டராக இருந்தவர். கான் ஸுல்ஃபிகார் அலி கான் சாஹிபின் மகனாக இருந்தார். இவரது சொந்த ஊர் நஜீபாபாத் பஜ்னுர் மாவட்டம் ஆகும். இது உ.பி –யில் உள்ளது. இவர் அதாவது டாக்டர் நுஸ்ரத் ஜஹான் சாஹிபாவின் தந்தைவழிப் பாட்டனார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் 1900 –ல் கடிதம் மூலம் பைஅத் செய்தார். பிறகு 1903 –ல் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சமூகத்தில் வருகை தந்தார். அவர்களை சந்திக்கும் பேறு பெற்றார். ஹஸ்ரத் மவ்லானா கான் ஸுல்பிகார் அலி கான் சாஹிப் கோஹர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருப்பத்திற்கேற்ப தனது மகனை சிறு வயதிலேயே மார்க்கத்திற்காக வக்ஃப் செய்தார். 1911 –ல் இவர் பிறந்தார். ஆனால், பிறப்பதற்கு முன்பே வக்ஃப் செய்யப்பட்டார். மவ்லானா 1932 –ல் மத்ரஸா அஹ்மதிய்யாவில் சேர்ந்த பிறகு பஞ்சாப் பல்கலைக்கழகத்திலிருந்து மவ்லவி ஃபாஸில் முடித்தார். அதற்குப் பிறகு இவருக்கு மிக நல்ல பணியும் கிடைத்தது. ஆனால், மவ்லவி அப்துல் மாலிக் சாஹிபுடைய தந்தையார் நீ உலகை சம்பாதிப்பதற்காக நான் உன்னை படிக்க வைக்கவில்லை என்று எழுதியுள்ளார். நம்மில் சிலர் மார்க்கத்தையும் சம்பாதிக்க வேண்டும். இந்தக் கடிதம் கிடைத்ததும் மவ்லானா அப்துல் மாலிக் சாஹிப் பணி துறந்து காதியான் திரும்பி வந்து முபல்லிக் வகுப்பில் திரும்ப இணைந்தார். இந்தப் பற்றுறுதியின் உணர்வுதான் டாக்டர் நுஸ்ரத் ஜஹான் இடமும் இருந்தது.

இவர் யூ.கே –வில் கல்வி கற்றார். அதற்கு முன் பாகிஸ்தானில் MBBS தேர்ச்சி பெற்றார். யூ.கே –வில் Specialize செய்தார். எங்கு சென்றாலும் இவர் தினசரி இலட்சக்கணக்கான ரூபாய் சம்பாதிக்க முடியும். ஆனால் மார்க்கத் தொண்டிற்காக மனித குலத்தின் சேவைக்காக சின்னஞ்சிறு ஊராகிய ரப்வாவில் வந்து குடியேறினார். அப்போது அங்கு மருத்துவமனை தேவையாக இருந்தது. அதனை நிறைவேற்றினார். பிறகு வாழ்நாள் முழுவதும் தன்னலமற்ற அந்த சேவையின் உச்சநிலையை அடைந்திருந்தார். இவரைப் பற்றி பலர் என்னிடம் தமது உணர்வுகளை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். அனைத்தையும் எடுத்துக் கூறுவது சிரமமாகும். சிலவற்றை நான் மேற்கொண்டு எடுத்துக் கூறுவேன்.

இவரது ஒரே மகள் ஆயிஷா நுஸ்ரத். இப்போது அவர் யூ.கே –வில் இருக்கிறார். அவருடன் அவரது மூன்று குழந்தைகள் உள்ளனர். நான் கூறியது போன்று டாக்டர் சாஹிபா பாகிஸ்தானிலுள்ள ஃபாத்திமா மெடிக்கல் கல்லூரியில் MBBS படித்து முடித்தார். பிறகு இங்கிலாந்தில் RCOG (Royal College of Gynecology) மகப்பேறுவில் Special Course செய்தார். 1985 –ல் ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் தமது பணியைத் தொடர்ந்தார். 20 ஏப்ரல் 1985 –லிருந்து இப்போது வரை பணி செய்து வந்தார். நான் கூறியது போன்று நோயுற்றும் இருந்தார். கல்லீரலில் நோய் இருந்தது. இதற்கு சிகிச்சை பெறுவதற்காக 5 ஏப்ரல் அன்று இங்கு வந்திருந்தார். இலண்டனில் சிகிச்சை நடைபெற்றது. அல்லாஹ்வின் அருளால் சிகிச்சை வெற்றிகரமாகவும் நடந்தது. பிறகு இவருக்கு Chest Infection ஆனது. மாநாட்டிற்குப் பிறகு அது மீண்டும் ஓரளவுக்கு சரியாகி விட்டதாகத் தோன்றியது. பிறகு திடீரென்று தாக்குதல் ஏற்பட்டது.

இவரது மருமகன் மக்பூல் முபஷ்ஷிர் சாஹிப் கூறுகிறார்: இறைவன் மீது அளவற்ற நம்பிக்கை இருந்தது. இறைவனை வணங்குவதில் ஆர்வம், திருக்குர்ஆன் ஓதுவதில் ஆர்வம், கிலாஃபத்துடன் ஆழிய பற்று இருந்தது. முழுமையாக மனப்பூர்வமாக கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டார். படைப்பினங்களுக்கு சேவை, அவர்களுக்கு நிவாரணம், நிம்மதி வழங்குதல் ஆகியவை இவரிடம் முன்னுரிமை பெற்றிருந்தன. இவர் கூறிய விஷயங்களுக்கு எனது சொந்த அனுபவம் மூலமாகவும் நான் சாட்சி கூறுகிறேன். கூறப்பட்டவை எதுவும் மிகையாகக் கூறப்பட்டவை அல்ல. உண்மையிலேயே அவரிடம் இப்பண்புகள் இருந்தன. ஒவ்வொரு சிகிச்சைக்கும் முன்பு துஆ செய்வார். தினமும் ஸதகா கொடுப்பார். ரப்வாவில் இருந்த பெரியவர்களிடம் தினமும் துஆவுக்காக கூறுவார். வழியில்லாத நோயாளிகளுக்கு சொந்த செலவில் சிகிச்சை செய்ய வைப்பார். ஜமாஅத் பணத்தைப் பற்றிய கவனம் அதிகமாக இருந்தது. ஜமாஅத்திற்கு குறைந்த அளவு செலவே ஏற்பட வேண்டும் என்ற கவனம் இருந்தது. ஜமாஅத்தின் ஒரு ரூபாய் கூட வீணாகக் கூடாது என்று நினைத்தார்.

அவர் கூறுகிறார்: நான் லாஹூரில் ஒரு தனியார் மருத்துவமனையில் பணி செய்தேன். என்னிடம் அவர் இன்ன பொருளை எந்த கம்பெனியிலிருந்து என்ன விலையில் வாங்கினீர்கள். இன்ன மருந்தை என்ன விலைக்கு எந்தக் கம்பெனியில் வாங்குகிறீர்கள் என்று கேட்பார். அது பொருத்தமானதாக இருந்தால் ஃபஸ்லே உமர் மருத்துவமனைக்காகவும் எது குறைந்த விலையில் தரமானதாகவும் கிடைக்குமோ அதனை வாங்குவார். பெற்றோரிடம் மிகவும் அன்பு இருந்தது. இவரது தாயாருக்கு நீண்ட கால நோய் இருந்தும் மிகவும் தொண்டு செய்தார். தனது கடமையை ஆற்றினார். தாயாருக்கும் தொண்டு செய்தார். தனது நோயின் நிலையிலும் இங்கு மிகவும் மகிழ்ச்சியுடன் கழித்தார். இறுதி நோயின்போது மருத்துவமனையில் சுமார் 2 மாதங்கள் இருந்தார். அப்போதும் திலாவத் ஓதுமாறு கூறி வந்தார். வீட்டில் குழந்தைகளை தொழுமாறும் குர்ஆன் ஓதுமாறும் கவனமூட்டி வந்தார். ஏதாவது நல்ல விஷயத்தை அல்லது குர்ஆன் ஓதுவதை குழந்தைகளிடம் பார்க்கும்போது மகிழ்ச்சி அடைந்து அன்பளிப்பு வழங்குவார். துஆ செய்வார்.

முபஷ்ஷிர் சாஹிப் கூறுகிறார்: எமது மகளுக்கு 12 வயது ஆகிறது. அவளை தலையை மூடுமாறும் பர்தாவை பேணுமாறும் வலியுறுத்தினார். ஹஸ்ரத் அம்மா ஜான் மற்றும் பிற பெரியவர்களை சான்று காட்டி சிறிய விஷயங்களை ஆனால் முக்கியமானவற்றை சம்பவங்களாகவும் உதாரணங்களின் வடிவிலும் கூறுவார். தாமும் பர்தாவை மிகவும் பேணுபவராக இருந்தார். பெற்றோர் பெரியவர்கள் தமது மக்களுக்கு போதனைகளை செய்து வர வேண்டும். இதனால் பர்தா பற்றிய தயக்கம் இளம் பெண்களிடம் இல்லாமல் போய் விடும்.

பிறகு டாக்டர் நுஸ்ரத் மஜூக்கா சாஹிபா கூறுகிறார்: டாக்டர் நுஸ்ரத் ஜஹான் சாஹிபாவுடன் எனக்கு 18 வருட தொடர்பிருந்தது. எனது வீட்டு வேலை முடிந்ததும் நாங்கள் இருவரும் சேர்ந்து பணியாற்றினோம். எனது முழு Professional Training –ம் டாக்டர் சாஹிபா தான் கொடுத்தார்கள். அவர் தகுதி வாய்ந்த ஆசிரியராக இருந்தார்கள். வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் எங்களுக்கு அவரிடமிருந்து வழிகாட்டல் கிடைத்து வந்தது. உறுதியானவரும் முழுமையானவரும் ஆக இருந்தார். இறைவன் அவருக்கு அசாதாரண திறமைகளை வழங்கி சிறப்பித்திருந்தான். அவர் ஒரு கட்டுப்பாடுள்ள அனுதாபமிக்க மகளாகவும், கருணை உணர்வு கொண்ட தாயாகவும் இருந்தார். ஒரு ஒழுக்கமுள்ள ஆசிரியராகவும் இருந்தார். பரிவு காட்டும் சகோதரியாகவும் இருந்தார். தோழியாகவும் இருந்தார்.

அவர் கூறுகிறார்: இவரது வாழ்வு முழுவதும் தியாகத்தால் நிரம்பியுள்ளது. ஜமாஅத் பணிகளுக்காக தமது சொந்த வேலைகளை மிகவும் பின்னால் விட்டு விடுவார். அவரது முக்கியத்துவங்கள் சாதாரண மனிதர்களை விட்டும் மிகவும் வேறுபட்டதாக இருந்தது. எனக்கு இரு குழந்தைகள் இருக்கிறார்கள். ஒன்று எனது மகள், மற்றொன்று எனது துறை என்று அவர் கூறுவார். எப்போதும் தனது துறையின் முன்னேற்றத்திற்காக முயற்சி செய்து வந்தார். நோயாளிகளுக்காக எப்போதும் செயலார்வத்துடன் இருந்தார். குறிப்பாக ஜமாஅத் ஊழியர்கள் மற்றும் ஏழை ஊழியர்களுக்காக மிகவும் கவனம் செலுத்துவார். மீண்டும் மீண்டும் ஃபோன் செய்து அவர்களது நோயைப் பற்றி விசாரிப்பார். எவரது மனைவியாவது நோயுற்றார் என்றால் அவரது நோய் குறித்து விசாரிப்பார். தனது கீழ் பணியாற்றுபவர்களுடன் அன்புடன் நடந்து கொள்வார்கள். எவரிடமாவது அதிக வேலை வாங்க நேரிட்டால் ஏதாவது ஒரு நோயாளியின் காரணமாக அதிக


**சுத்தமான தேன் கிடைக்கும்**

**ஆரோக்கியமான வாழ்விற்கு தேனியியல் மருந்து *(Honey Medicine)* கிடைக்கும்.**

**Dr. M.J. அக்பர் அலி**

B.Com., M.A., B.Ed., PGD Y&N, RMP (Homeo)

Institute of Honey bees' Medicine Education Research & Sales

101 B/1, First Floor, Nethaji Road, Melapalayam,

Tirunelveli - 627 005 Ph : +91 95006 62284


**திருக்குர்ஆனிலிருந்து**

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)


**A. பஷீர் அஹ்மது**

வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

வேலைப்பளு ஏற்பட்டால் வீட்டிலிருந்து அவர்களுக்காக உணவை அனுப்பி வைப்பார். ஒரு சிரமமான வேலையில் அவர்களுக்காக உதவி செய்ய முயற்சி செய்வார். கிலாஃபத்துடன் இவருக்கு ஆழிய தொடர்பிருந்தது என்று ஒவ்வொருவரும் எழுதியுள்ளார்கள். இதுவே உண்மையாகும். அசாதாரண தொடர்பிருந்தது.

அவர் கூறுகிறார்: கடந்த வருடத்திலிருந்து என்னை ஒவ்வொரு விஷயத்திலும் இணைத்துக் கொண்டார். ஒவ்வொரு முக்கிய விஷயத்திலும் என்னை உடன் வைத்துக் கொண்டார். எல்லா வகையான மகப்பேறு அறுவை சிகிச்சையையும் எனக்கு கற்றுத் தந்தார். இதுவும் எனக்கு காலம் மிகக் குறைவாகவே உள்ளது என்பதை (அவர் உணர்த்துவதை) வெளிப்படுத்தியது.

அவர் கூறுகிறார்: இதற்கு என்ன பொருள் என்று நான் நினைத்துப் பார்த்திருக்கவில்லை. ஏனெனில் அவர் மிகவும் Active ஆக இருந்தார். அவரது மரணத்திற்குப் பிறகு இது அவருக்கு பிடித்தமானதாக இருந்தது தெரிய வந்தது.

அவர் கூறுகிறார்: அவர் விட்டு விட்டுப் போய் விட்டார். ரப்வாவாசிகள் மீது மிகப் பெரும் உபகாரம் செய்துள்ளார். ஒவ்வொரு கண்ணும் இன்று கண்ணீர் வடிக்கிறது. ஒவ்வொரு உள்ளமும் வேதனைப்படுகிறது. நிறைய கடிதங்கள் எனக்கு வந்துள்ளன. எழுதியிருக்கிறார்கள். இது பெரும் உண்மையாகும்.

கானாவில் நமது மருத்துவமனையின் டாக்டர் அமத்துல் ஹைய் சாஹிப் எழுதியிருக்கிறார்: நானும் எனது ஆரம்ப பயிற்சியை டாக்டர் நுஸ்ரத் ஜஹான் அவர்களிடமிருந்து பெற்றேன். நான் கானா சென்ற போது தொடர்ந்து வாட்ஸ்அப், இ–மெயில் மூலமாக தொடர்பு கொண்டிருந்தார். ஏதேனும் மகபேறுவில் ஏதாவது பிரச்சனை என்றால் எனக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் பதில் சொல்வார். வழிகாட்டல் வழங்குவார். ஒவ்வொரு சிக்கலான நிலையிலும் காலத்தின் கலீஃபாவிடம் துஆவுக்காக எழுதுங்கள் என்று கூறுவார்.

பிறகு கூறுகிறார்: நான் டாக்டர் சாஹிபாவுடன் பணி செய்தபோது சிறு சிறு விஷயங்களிலும் கவனம் செலுத்துவார். அவர் கூறுகிறார்: அதிகமாக லைட் எரிவதைப் பார்த்தால் அதனை அணைப்பார். ஜமாஅத் பைசா காரணமில்லாமல் ஏன் வீணாக வேண்டும் என்பார். பிறகு திருமணமானவருக்கு திருமணத்தை நிலைத்திருக்கச் செய்வதற்கு கவனமூட்டுவார். இரத்த பந்தம் முறியாது. ஆனால் கணவன் மனைவி பந்தம் அன்பு நேசம் இல்லாமல் நிலைத்திருக்க முடியாது என்று கூறுவார். நல்ல ஒரு கருத்தைக் கூறியுள்ளார். ஒவ்வொரு திருமண ஜோடிகளும் இதன்படி செயல்பட வேண்டும்.

அவர் கூறுகிறார்: மருத்துவமனையில் கடந்த நாட்களில் அதாவது இலண்டன் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவிருந்த இரண்டு நாட்களுக்கு முன்பு எனக்கு ஃபோன் செய்தார். ரப்வாவில் புதிய மகப்பேறு தியேட்டர் கட்டப்பட்டுள்ளது. நான் சென்று பார்க்க முடியுமா? முடியாதா? தெரியவில்லை என்று கூறினார். நானும் அவர்களிடம் கூறினேன். நாஸிர் அஃலா மூலமாக அதனை திறந்து வையுங்கள் என்று வழிகாட்டல் அனுப்பினேன். ஏனெனில் தனி நபர்களால் ஜமாஅத் பணிகள் நிற்காது.

ரப்வாவின் தாஹிர் ஹார்ட் மருத்துவனையின் இன்சார்ஜ் டாக்டர் நூரி சாஹிபா கூறுகிறார்: கடந்த 9 வருடங்களை விட அதிக காலம் டாக்டர் நுஸ்ரத் ஜஹான் சாஹிபா உடன் ஃபஸ்லே உமர் மருத்துவமனையின் சுபைதாபாணி Wing மற்றும் Tahir Heart Institution –லும் பணி செய்யும் வாய்ப்பு கிடைத்தது. அவரிடம் காணப்பட்ட சிறப்புகள் இக்கால டாக்டர்களிடம் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. மிகவும் நல்லவரும், துஆ செய்பவரும், நல்லொழுக்கமுள்ளவரும், இறையச்சமுள்ளவரும், தனது நோயாளிக்காக துஆ செய்பவரும், பர்தாவை நுட்பமான முறையில் அனுசரிப்பவரும், திருக்குர்ஆனில் பரந்த அறிவு கொண்டவரும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது முன்மாதிரியின்படி செயல்படுபவருமான பெண்மணியாகவும் இருந்தார். யூ.கே –விலும் படித்திருந்தார். கூடுதல் அறிவுக்காக இங்கு வந்து படித்திருக்கிறார். முழுமையாக நிகாப் –ஐ பர்தா செய்திருந்தார். முழு புர்கா அணிந்தார். எந்த தாழ்வு மனப்பான்மையும் எப்போதும் அவரிடம் இருந்ததில்லை. எல்லா வேலைகளையும் பர்தாவுக்குள் இருந்தவாறே செய்தார். பர்தா போட்டுக் கொண்டு பணி செய்ய இயலாது என்று சாக்குப்போக்குகளைக் கூறும் இளம் பெண்களுக்கு இவரிடம் ஒரு முன்மாதிரி இருந்தது.

பிறகு கூறுகிறார்: தனது தொழிலில் மிகுந்த திறமைமிக்கவராக இருந்தார். நவீன தொழில் நுட்பங்களில் வந்த கல்விகளையும் அறிந்திருந்தார். தமது அறிவை புதிய எதிர்பார்ப்புகளுக்கேற்ப அதிகரித்தவாறு பணி செய்தார். பணி செய்யும்போது நேரத்தைப் பொருட்படுத்தியதில்லை. கிடைத்த வசதிகளிலிருந்து அனுமதிக்கப் –படாத பயன் அடைந்ததில்லை. சிக்கலான நோயாளிகளுக்காக தனது ஓய்வு நேரத்தை அர்ப்பணித்து 12 மணி நேரங்கள் பணி செய்தார்.

அவர் கூறுகிறார்: எனக்கு நினைவு உள்ளது. ஒருமுறை ஒரு சிக்கலான டெலிவரி கேஸில் முழு இரவும் விழித்திருந்து பணி செய்துள்ளார். இயன்ற சாத்தியக் கூறுகளை எடுத்துரைத்தார். நோயாளிகளுக்கும் இவர் மீது பெரும் நம்பிக்கை இருந்தது. சட்ட வசதிகளை மிகவும் மதிப்பவர். தனது கடமைகளை மிகவும் நேர்மையுடன் செய்தார். மக்களுள் சிலர் கூறுவார்கள். அவர் கடினமானவர் என என்னிடமும் எழுதியிருக்கிறார்கள். விதிமுறைகளை கண்டிப்புடன் கடைபிடித்தார். ஆனால் உள்ளமோ மிகவும் மென்மை வாய்ந்ததாக இருந்தது. கொடையுள்ளமும் அனுதாப உணர்வும் இவரது சிறப்புப் பண்புகளாக விளங்கின.

டாக்டர் நூரி சாஹிபா எழுதுகிறார்: ஒரு பலவீனமான பெண்மணி ஒருவர் Tahir Heart Institute –ல் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் தனது சம்பவம் ஒன்றை கூறுகிறார். ஒருமுறை டாக்டர் சாஹிபா தனது பணியை முடித்து விட்டு வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார். மருத்துவமனை அருகில் அவரை அக்ஸா ரோட்டில் பார்த்தேன். காரை நிறுத்தி விட்டு எனது கழுத்தில் கை வைத்து மிகவும் வாஞ்சையுடன் எனது நோயைப் பற்றி விசாரித்தார். அங்கேயே ஒரு மருந்து எழுதிக் கொடுத்து விட்டு சென்று விட்டார்கள். அவரது பேச்சாற்றலும் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. அவரது தந்தையார் மவ்லானா அப்துல் மாலிக் அவர்களும் பெரும் சொற்பொழிவாளராக இருந்தார். லாஹூரின் சதர் லஜ்னாவான ஃபவ்ஸிய்யா ஷமீம் சாஹிபா அவர்கள் நூரி சாஹிபாவிடம் கூறினார். லாஹூரில் லஜ்னாக்களிடம் சொற்பொழிவாற்றுவதற்காக அழைக்கப்பட்டால் அவர்களது விளக்கம் மற்றும் சொற்பொழிவின் தாக்கம் எல்லார் மீதும் ஏற்படும். அவர்களது பேச்சின் மையக்கருத்து அஹ்மதிய்யத், கிலாஃபத், இறை அருள் பற்றி குறிப்பிடுவதாகவே இருக்கும். அவரது பேச்சில் அவரது தந்தையார் மவ்லானா அப்துல் மாலிக் சாஹிபின் பொலிவு தென்பட்டது. கிலாஃபத்துடன் பற்று மற்றும் தூய தொடர்பு இருந்தது. கூட்டங்கள் மற்றும் செமினார்களில் எந்த அளவுக்கு எனில் வார்டுகளின் ரவுண்டு வரும்போது கூட காலத்தின் கலீஃபாவின் மேற்கோள்களைக் குறிப்பிடுவார். கிலாஃபத்துடன் பற்று என்பது வெறும் நாவளவில் நிற்பதில்லை. அவரது செயலிலும் அது வெளிப்பட்டது. சரியான பொருளில் ஒரு ரோல் மாடல் பெண்மணியாக இருந்தார்.

டாக்டர் முஹம்மது அஹ்மது அஷ்ரஃப் சாஹிப் எழுதுகிறார்: இறைவன் அவருக்கு பெரும் தொலைநோக்கும் தூர சிந்தனையும் வழங்கியிருந்தான். சில வேளைகளில் நோயாளிகளின் சிகிச்சைக்காக ஒரு Procedure இருந்ததால் அதனை சிறிது காலத்திற்கு அவர் தாமதப்படுத்தி வந்தார். பிறகு அவரது இந்த தீர்ப்பை சரியானதாக இருந்தது. மிகவும் சிறந்த நிர்வாகியாகவும் இருந்தார். துறையின் பணிகளில் முழுமையான பிடிப்புடன் இருந்தார். சட்ட விதிகளுக்கு கட்டுப்படுவார். தனது கருத்துக்களை வெளிப்படையாகக் கூறுவார். பரிசோதனைகள் செய்வதிலும் அதிலிருந்து அடுத்த கட்ட சிகிச்சைக்காக வழிகாட்டலை எடுப்பதிலும் சிறந்த விளங்கினார். நிர்வாக விவகாரங்களில் ஒரு உறுதித்தன்மை அவரிடத்தில் இருந்தாலும் தன்னைச் சுற்றி பணிபுரிபவர்களுடன் அன்பு நேசம் காட்டுபவராகவும் இருந்தார். அவர்களது மகிழ்ச்சியான தருணங்களில் பங்கெடுப்பவராக இருந்தார். அனுதாபம் மற்றும் கருணையின் வட்டம், உறவினர்களுடன் பணியாற்றுபவர் –களுடன் உள்ள தொடர்பு மருத்துவமனையின் வரம்புக்குள் மட்டும் நிற்கவில்லை. கீழ் பணியாற்றுபவர்களின் குடும்பத்தினர் நோயுற்றிருந்தாலும் நோயாளிகளும் அவர்களது உறவினர்களும் அவரிடமிருந்து பயன் பெற்றதையே கண்டோம். தேவை உடையவர்களுக்கு மிகவும் திறந்த மனதுடன் அவர்களது கண்ணியத்தை கவனத்தில் கொண்டவாறு அமைதியாக உதவி செய்வார்.

டாக்டர் சாஹிப் கூறுகிறார்: முக்கியமான ரிக்கார்டுகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பார். கூறுகிறார்: எளியவனின் அறிவுக்கேற்ப அவரது தலைமையில் மகப்பேறு துறையின் ரிக்கார்டு இப்போது மிகச் சிறந்த நிலையில் இருந்தது.

ஒரு முரப்பியான ஃபஸீல் அயாஸ் சாஹிப் கூறுகிறார்: மிகவும் அனுதாபமும் அனுசரனையும் உள்ளவராக இருந்தார். 1999 –ல் இந்த எளியவன் ரப்வா ஜாமிஆ அஹ்மதிய்யாவில் தொண்டு செய்யும் வாய்ப்பு பெற்றபோது எனது மனைவி மற்றும் மகளுடன் ரப்வாவுக்கு வந்தபோது எமக்கு டாக்டர் சாஹிபா சிகிச்சையைத் தொடங்கினார். குழந்தைப் பேறுக்கான சிகிச்சை அல்லது வேறு ஒரு பிரச்சனையாக இருந்தது. எவ்வாறிருப்பினும் மிகவும் அனுதாபத்துடன் சிகிச்சை செய்தார். வாழ்வை அர்ப்பணித்த ஒரு முரப்பியின் மனைவி என்ற முறையில் எனது குழந்தையும் மனைவியும் அவரது சிறப்பான அன்புக்கு காரணமாக இருந்தார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப் –பட்டுள்ள துமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

ஜலாலுத்தீன்
ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.
Ph : +91 98409 17179

O.A.N. DOORS & STEELS
O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்
*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*
Ambai Road, (Opp. Karuna Clinic), Kulavanikarpuram, Tirunelveli - 627 005
O.A. NIJAM - 99947 571772 V.A. SAIT - 99430 30230

அவர் கூறுகிறார்: எமக்கு 4 மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். ஃபஸ்லே உமர் மருத்துவமனையிலேயே அவர்கள் பிறந்தார்கள். கூறுகிறார்: எப்போதுமே குழந்தைகள் மற்றும் அவற்றின் தாயாரின் ஆரோக்கியம் குறித்து எங்களை விட அதிகமாக கவலை கொண்டவராக அவரை நாங்கள் பார்த்தோம். எங்கள் வீட்டில் நான்கு பெண் குழந்தைகள் இருந்தனர்.

அவர் கூறுகிறார்: ஒருமுறை எனது மூன்றாவது மகள் நான்கு வயது இருக்கும். அக்குழந்தை அவரது வீட்டிற்கு போய் அவரிடம், எங்களுக்கும் ஒரு சகோதரனை தாருங்கள் என்று கூறியது. அக்குழந்தையிடம் மிகவும் அன்பு காட்டியவாறு அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள். அல்லாஹ் உனக்கு ஒரு சகோதரனை தரட்டும் என்றார். மீண்டும் குழந்தை உண்டான போது டாக்டர் சாஹிபா தானும் துஆ செய்தார்கள். நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களுக்கும் இவரது மனைவிக்காக துஆ செய்யுமாறு கூறினார். தன்னை சந்திக்க வந்த ஒவ்வொருவரிடமும் இவரது மனைவிக்காக துஆ செய்யுமாறு கூறினார்.

அவர் கூறுகிறார்: இறுதியில் இறைவன் அருள் புரிந்தான். மகன் பிறந்தான். வீட்டிற்கு வந்து தானே எனது மகளை கூட்டிப் போய் அல்லாஹ் உனக்கு ஒரு தம்பியை தந்து விட்டான் என்று கூறினார். பிறகு தானே வந்து தனது வண்டியில் எனது மனைவியை எனது வீட்டில் விட்டு விட்டுச் சென்றார்.

அஹ்மதியல்லாத நோயாளிகளும் நிறைய பேர் இவரிடம் வருவார்கள். ஒருமுறை அவரே கூறியுள்ளார். சினியோட்டியின் ஓர் அஹ்மதி அல்லாத மவ்லவி ஒருவர் வந்தார். அவரது மனைவிக்கு குழந்தை உருவாகவில்லை. இவரது சிகிச்சையினால் அல்லாஹ் அருள் புரிந்தான். குழந்தை உண்டானது. அவர் கூறுகிறார்: 9 மாதங்கள் இந்த மவ்லவி சாஹிபின் கட்டுப்பாடு என் வசம் இருந்தது என்கிறார். அவருக்கு நன்றாக தப்லீக் செய்தார். எந்த பயமும் கொள்ளவில்லை.

அரபிக் டெஸ்கில் பணியாற்றும் நமது தாஹிர் நதீம் சாஹிப் கூறுகிறார்: டாக்டர் சாஹிபிற்கு மருந்தை விட அதிகமாக துஆவின் மீது நம்பிக்கை இருந்தது. கூறுகிறார்: நான் இலண்டன் வந்து விட்டேன். எனது மனைவி அங்கு இருந்தார். மனைவிக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டியதிருந்தது. ஆபத்து ஒன்று உருவானது. டாக்டர் என்னிடம் கூறினார்: அப்போது நான் இறைவனிடம் அழுதழுது துஆ செய்தேன். என் இறைவா! வாழ்வு அர்ப்பணித்த ஒருவரின் மனைவி அவள். இவளது கணவன் உனது மார்க்கத்தின் தொண்டிற்காகச் சென்றுள்ளார். இந்த வகையில் அல்லாஹ் சிறிது நேரத்திற்குப் பிறகு எந்த அளவுக்கு அருள் செய்தான் என்றால் Bleeding ஆகிக் கொண்டிருந்தது முழுமையாக நின்றது. அறுவை சிகிச்சையும் தேவையில்லாமல் போனது.

அவர்களது விருந்தோம்பல் பற்றி நதீம் சாஹிப் கூறுகிறார்: அல்ஹிவாருல் முபாஷிர் நிகழ்ச்சிக்காக அரபு மக்கள் வந்து அமர்கிறார்கள். இலண்டனில் 53 விருந்தினர் இல்லம் உள்ளது. அங்கு தான் இவர் தங்கியிருந்தார். சமையல் அறையில் பரோட்டா சமைத்துக் கொண்டிருந்தார். அவர் கூறினார்: அரபு மக்கள் வருகிறீர்கள். அல் ஹவாரில் நிகழ்ச்சியில் பங்கெடுக்கிறீர்கள். நீங்கள் மார்க்கப் பணியில் பங்கெடுக்கிறீர்கள். உங்களுக்கு எனது கையால் பரோட்டா செய்து சாப்பிட வைக்க வேண்டும் என்று விரும்பினேன். அதன் மூலம் நானும் இந்த ஜிஹாதில் இணைய வேண்டும் என்று விரும்பினேன் என்றார்.

ரப்வாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யா பிரின்ஸிபல் டாக்டர் முபஷ்ஷிர் அயாஸ் சாஹிப் இவரது நடவடிக்கை மற்றும் பர்தா பற்றி எழுதுகிறார்: நமது டாக்டர் சாஹிபா பர்தாவின் மிகச் சிறந்த அசல் வடிவம் உடையவராக இருக்கிறார். அவர் இராணுவ வீரர் போன்று அங்குமிங்கும் விரைந்தோடி நடப்பவராகத் தென்பட்டார். பர்தாவை ஒரு தடையாக கருதக்கூடிய பெண்களுக்கு இவர் மிகச் சிறந்த ரோல் மாடல் ஆக இருந்தார். நாள் முழுவதும் வேலை செய்து வந்தார். பிறகும் கூட மிகவும் Active ஆக இருந்தார். ஒருபோதும் சோர்வு வெளிப்பட்டதில்லை.

டாக்டர் சுல்தான் முபஷ்ஷிர் சாஹிப் கூறுகிறார்: சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா குவாட்டரில் நாங்களும் தங்கிருந்தோம். இவரும் தங்கிருந்தார். அப்போது ரப்வாவின் சூழ்நிலை செயற்கைத்தன்மையற்றதாக இருந்தது. ஒருவருக்கொருவர் சகஜமான நடைமுறை இருந்தது. போக வர வேண்டியது இருந்தது. டாக்டர் சுல்தான் முபஷ்ஷிர் சாஹிப் அவர்கள் மவ்லானா தோஸ்த் முஹம்மது சாஹிபின் மகனாவார்கள். இவருக்கும் மவ்லானா அப்துல் மாலிக் சாஹிபிற்கும் இடையில் நட்பு இருந்தது. மவ்லானா அப்துல் மாலிக் சாஹிபிற்கு அங்கு மகனும் இல்லை. எனவே, தோஸ்த் முஹம்மது ஷாஹித் சாஹிப் அவரது மகனிடம், மவ்லானா அப்துல் மாலிக் சாஹிபிற்கு ஏதாவது தேவை இருக்கிறதா? என்பதைக் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். ஏதாவது கடையில் வாங்கி வர வேண்டும் என்றால் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறி இருந்தார். எனவே, இவர் அங்கு சென்று வந்ததினால் ஒரு சகஜ நிலை இருந்தது.

அவர் கூறுகிறார்: இதனால் டாக்டர் சாஹிபாவிடமும் தேவைகளைக் கேட்டு வருவார். பிறகு அவரது சக பணியாளர் ஆகவும் இருந்தார். ஒவ்வொரு பணியைச் செய்து முடிக்கும்போதும் டாக்டர் சாஹிபா அவர்கள் அதற்கு நன்றி கூறுபவராக இருந்தார். எண்ணற்ற நன்றி கூறியவாறு பிள்ளைகளுக்கு அன்பளிப்பும், அவருக்கு அன்பளிப்பும், மனைவிக்கு அன்பளிப்பும் தருபவராக இருந்தார். இவரது மகப்பேறு துறையின் புதிய தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு வருடமும் இங்கிலாந்து சென்று புதிய Procedure –களை கற்றுக் கொண்டு வருவார். சொந்த செலவில் செல்வார். ஜமாஅத் செலவில் அல்ல. பல்வேறு ஜமாஅத் மக்களின் ஒத்துழைப்புடன் புதிய மெஷின்கள் வாங்கி வந்தார்.

அவர் கூறுகிறார்: தற்போது கூட சுபைதாபாணி wing –ல் புதிய அறுவை சிகிச்சையின் தியேட்டர் உருவாக்குவதில் தீவிரமாக பங்கெடுத்தார். அதனை பயன்படுத்த அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. எவ்வாறிருப்பினும், தற்போது இருக்கிற டாக்டர்களுக்கு அதனை சரியாகப் பயன்படுத்த அல்லாஹ் வாய்ப்பு வழங்குவானாக!

அவர்கள் கூறுகிறார்கள்: துறையின் தற்போதைய நிலை ஒரு அறையிலிருந்து தான் ஆரம்பமாகியது. ஃபஸ்லே உமர் மருத்துவமனையின் மகப்பேறு துறை ஒரேயோர் அறையில்தான் ஆரம்பமானது. இப்போது முழுமையான ஒரு wing –ல் மாற்றம் பெற்று விட்டது. இதில் டாக்டர் நுஸ்ரத் ஜஹான் அவர்களின் தினசரி உழைப்பு மற்றும் திறமையின் முழுமையான உணர்வுக்கு பெரும் பங்கு உள்ளது.

அவரது ஒரு Staff Nurse ஜமீலா சாஹிபா கூறுகிறார்: டாக்டர் வஃபாத் ஆனதில் எனக்கு மிகவும் துயரம் ஏற்பட்டது. சிறு குழந்தையைப் போன்று எங்களிடம் அன்பு காட்டினார்கள். ஏழை நோயாளிகள் வந்தால் நுழைவுச் சீட்டுக்கான பைசாவை கூட திரும்ப தந்து விடுவார். தன் தரப்பிலிருந்து மருந்தும் தருவார்.

இன்னொரு Staff Nurse முஸர்ரத் சாஹிபா கூறுகிறார்: நுஸ்ரத் சாஹிபா மிகச் சிறந்த பரிவுள்ள ஆசிரியரும் உயரிய தகுதி வாய்ந்த டாக்டருமாக இருந்தார். சுமார் 31 வருடங்கள் அவருடன் கழித்திருக்கின்றேன். மிகவும் அன்பு காட்டக் கூடிய கண்ணியமிக்கவரும் ஒவ்வொரு சிக்கல் நிறைந்த நேரத்தில் உதவி செய்பவரும், பெரியவர்களின் மீது பரிவு காட்டுபவரும் சிறுவர்களின் மீது நேசத்துடன் நடந்து கொள்பவரும் நோயாளிகளுடன் மிகவும் அன்பு காட்டுபவரும், அவர்களது வேதனையை தன் வேதனையாக நினைப்பவரும், எல்லா Staff –களுக்கும் மனிதகுல சேவையையும், நல்லொழுக்கத்தின் பாடத்தை தருபவரும், காலத்தின் கலீஃபாவின் கட்டளைக்கு லப்பைக் கூறுபவருமான பெண்ணாக அவர் இருந்தார்.

அவர் எழுதுகிறார்: பிறகு இன்னொரு நோயாளிக்கு சிகிச்சை செய்து கொண்டிருந்தார். அவர் வாழ்வை அர்ப்பணித்தவரின் மனைவி என்ற முறையில் அவருக்க மிகவும் கவனம் செலுத்தினார். அவருக்கு Ultra Sound செய்ய வேண்டியிருந்தது. தனது உதவியாளரிடம் Ultra Sound செய்யுமாறு கூறினார். அப்போது நல்ல Rush இருந்தது. நாற்காலியில் ஓர் ஏழைப் பெண் அமர்ந்திருந்தார். இவரது உதவியாளர் அந்தப் பெண்ணை எழச் சொல்லி டாக்டர் அனுப்பிய பெண்ணை அங்கே உட்கார வைக்க நினைத்தார். திடீரென்று பின்னால் இருந்து சப்தம் வந்தது. இல்லை. இந்த நாற்காலியில் உட்காருங்கள் என்று தாமே ஒரு நாற்காலி எடுத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார். நாம் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுப்பப்பட்டு விட்டதாக மற்ற ஏழை நோயாளிக்கு உணர்வு வந்து விடாமல் இருப்பதற்காக அவ்வாறு செய்தார். ஏனெனில் நோயாளி எல்லாரும் ஒன்றுதான். இன்னொருபுறம் ஒருவரின் நிலை கண்டு அவருக்கு உட்கார இடம் தருவதற்காக தானே நாற்காலி எடுத்துக் கொண்டும் வந்தார். தனது நோயாளியை அதில் உட்கார வைத்தார்.

இன்னொரு டாக்டர் சாஹிபா எழுதுகிறார்: ஜமாஅத்திற்காக மிகவும் தன்மானம் கொண்டவராக இருந்தார். கிலாஃபத்துடன் அளவற்ற நேசம் கொண்டிருந்தார். உடன் பணி செய்த டாக்டர்களுக்கும் அதனை கூறி வந்தார். காலத்தின் கலீஃபாவுடன் தொடர்பை வைத்துக் கொள்ளுங்கள். அதிகமாக துஆக்காக அவர்களுக்கு எழுதுங்கள் என்பார்கள். ஒவ்வொரு வேலைக்காவும் துஆவுக்காக எழுதுங்கள். பிறகு அவர்களிடமிருந்து பதில் வந்தால் எல்லாருக்கும் வாசித்தும் காட்டுவார். அதில் மகிழ்ச்சி அடைவார். அவரது மகிழ்ச்சி அவரது முகத்திலும் கண்களிலும் வெளிப்படும். அது எங்கள் எல்லாரின் வாழ்க்கையிலும் ஈமான் அதிகரிக்க காரணமாக இருந்தது. இவர் தனது வாழ்வை அர்ப்பணித்து தமது உலகியல் ஆசைகளையும் பொருளையும் தியாகம் செய்தது மட்டுமின்றி எல்லா டாக்டர்களுக்கும் தனது வாழ்வை முன்மாதிரியாக்கி வக்ஃப் மற்றும் ஜமாஅத்திற்காக Motivate செய்துள்ளார். இவருடன் வேலை செய்வதன் மூலம் தினமும் ஈமான் வலுப்பெறுகிறது. உள்ளத்தில் வக்ஃபின் ரூஹ் நிற்கிறது.

கிலாஃபத்துடன் அவருக்குள்ள தொடர்பு குறித்து நமது பத்திரிகைத் தொடர்புச் செயலரான ஆபித் கான் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள். டாக்டர் சாஹிபா இவரிடம் கூறியுள்ளனர். நான் காலத்தின் கலீஃபாவின் வாயினால் ஒரு விஷயத்தை மேலெழுந்தவாரியாக கேட்டிருந்தால் கூட அது ஒரு கட்டளையாக இல்லையென்றால் கூட அதனை ஒரு கட்டளையாகவே நான் கருதுகிறேன். அதனை செயல்படுவதற்கு முயற்சி செய்கிறேன் என்றார். இதுவே அவரது பற்று மற்றும் கட்டுப்படுதலின் தகுதியாகும்.

அவரைப் பற்றி நிறைய எழுதுபவர்கள் இருக்கிறார்கள். அனைத்தையும் கூறுவது சிரமமாகும். ஒருமுறை ஒரு பெண்மணி எழுதியுள்ளார். மருத்துவமனையின் பின்னால் உள்ள வீட்டிலிருந்து லஜ்னாவின் அலுவலகம் சென்று கொண்டிருந்தேன். அப்போது அவர் ஜமாஅத்தின் வண்டியில் வெளியே வந்து கொண்டிருந்தார். ஏதோ ஒரு ஜமாஅத் பணிக்காக சென்று கொண்டிருந்தார். என்னிடம் எங்கு செல்கிறீர்கள் என்று கேட்டார். லஜ்னா அலுவலகத்தில் இன்ன வேலைக்காக போகிறேன் என்று நான் கூறினேன். அவர் டிரைவரிடம், முதலில் இவரை லஜ்னா அலுவலகத்தில் விட்டு வாருங்கள். ஏனெனில் ஜமாஅத் வண்டியை நான் ஜமாஅத் பணிக்காக மட்டுமே பயன்படுத்துகிறேன் என்று கூறினார்.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

**நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கு விருப்பமுள்ளவனாக இருந்தேன். அவற்றைக் கேட்டு நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியிருக்கின்றேன். எந்த மக்கள் இஸ்லாம் தொடர்பாக சந்தேகத்தில் இருக்கின்றனரோ அவர்கள் இங்கு வந்து கலீஃபாவின் சொற்பொழிவைக் கேட்டால் இஸ்லாம் தொடர்பாக அவர்களிடம் இருந்து வரும் எண்ணங்களில் முற்றிலுமாக மாற்றம் ஏற்பட்டு விடும்.**

## 2016 -ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30 -ஆம் தேதி ஜெர்மனியிலுள்ள Frankenthal நகரில் நடைபெற்ற நூர் பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் எழுச்சிமிகு சொற்பொழிவு

- ஒரு விருந்தினரான பெரியவர் தனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் ஒரு நீண்ட காலகட்டமாக தொடர்பு இருந்து வருகிறது என்றும் 30 -க்கும் மேற்பட்ட பல்வேறு அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சிகளில் தான் கலந்து கொண்டிருப்பதாகவும் கூறினார். ஆனால், தான் இதுவரை இவ்வளவு சிறந்த ஏற்பாட்டை வேறு எங்குமே கண்டதில்லை என்றும், அவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்கு விருப்பமுள்ளவராக இருந்தார் என்றும், அந்தக் கருத்துக்களைக் கேட்டு அவர் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியிருந்தார் என்றும் அவர் கூறினார். எந்த மக்கள் இஸ்லாம் தொடர்பாக சந்தேகத்தில் இருக்கின்றனரோ அவர்கள் இங்கு வந்து ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவைக் கேட்டால் இஸ்லாம் தொடர்பாக அவர்களிடம் இருந்து வரும் எண்ணங்களில் முற்றிலுமாக மாற்றம் ஏற்பட்டு விடும். மேலும், இஸ்லாத்தின் போதனைகள் கிறித்தவத்தின் போதனைகளுடன் அதிகமாக ஒத்திருப்பதைப் பார்த்து அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படும் என்றும் அவர் கூறினார்.
- லார்டு மேயர் அவர்கள் தமது கருத்துக்களையும் வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்: ஹுஸூர் அவர்கள் மிகவும் ஒளிமயமான, அன்பு செலுத்துகின்ற, அமைதியை விரும்புகின்ற ஒரு பெருந்தகை ஆவார்கள். அவர்கள் வெற்றி பெறப் போகின்ற தூதுச் செய்தியைக் கொண்டு வந்துள்ளார். எதனை அவர்கள் கூறினார்களோ அதுவே அவர்களின் ஆசையாக இருக்கின்றது. நீங்கள் இந்த அளவு அமைதியை விட்டும் தொலைவில் இருக்கின்றீர்கள் என்ற விஷயம் சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு தெரிய வேண்டும்.
- (CDU) Baldauf என்ற கிறித்தவக் கட்சியின் துணை சேர்மன் ஆன Pfalz அவர்கள் தனக்கு ஜமாஅத்தைப் பற்றி 15 வருடங்களாக தெரியும் என்று கூறினார். அவர்கள் பலரது வீடுகளுக்கும் சென்றுள்ளார்கள். இன்று அவர்கள் ஹுஸூர் அவர்களுடன் தமது நேரத்தைக் கழித்ததில் அஹ்மதிகள் நிச்சயமாக இந்த உயர்வான ஒழுக்கத்தை தமது கலீ.்.பாவிடம் இருந்தே பெற்றுள்ளனர் என்ற விஷயத்தை தாம் தெரிந்து கொண்டதாக கூறினார். கலீ.்.பா அவர்களின் தூதுச் செய்தி அன்பை கொண்டு வரக்கூடியதாகும். இந்த அமைதியை விரும்புகின்ற, அன்பு நிறைந்த இந்த தூதுச் செய்தியைக் கேட்டு ஹுஸூர் அவர்கள் எனது ஆன்மீக தோழராக இருப்பது போன்று தோன்றியது என்றும் அவர் கூறினார்.
- உள்ளூர் காவல்துறையில் உள்ளவர்கள் தமது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இந்த நிகழ்ச்சி எங்களுக்கு அமைதி நிறைந்ததாக தெரிந்தது என்றும் அவர்கள் ஜமாஅத் தொடர்பாக நல்ல விஷயங்களையே கேள்விப்பட்டுள்ளனர் என்றும் அவர்களுக்கு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் முற்றிலும் எந்த ஓர் இடையூறும் ஏற்படவில்லை என்றும் அவர்கள் கூறினர். ஹுஸூர் அவர்கள் மிகவும் கண்ணியத்திற்குரிய போற்றுதலுக்குரிய பெருந்தகை ஆவார்கள் என்றும் அவர்களது சொற்பொழிவு மிக விரிவானதாக இருந்தது. குறிப்பாக, பெண்களுக்குரிய உரிமைகள் தொடர்பாக கூறப்பட்ட போதனைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அவர்களது சொற்பொழிவு மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. 'எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்தும் இல்லை வெறுப்பு' என்ற உங்களது இந்த முழக்கம் மிகவும் வலுவான தூதுச் செய்தியாகும். முழு சமுதாயத்திற்கும் அது பயன்தரக் கூடியதாகும் என்றும் அவர்கள் கூறினர்.
- ஓர் ஆசிரியர் தான் இந்த நிகழ்ச்சி எப்படி நடக்கின்றது என்பதைப் பார்ப்பதற்காக மட்டுமே இங்கு வந்ததாக கூறினார். அவர் மிகுந்த தாக்கத்திற்கு ஆளானார். ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவிற்கு ஓர் ஆழமான அடிப்படை இருக்கின்றது. அதனை சிந்தனை செய்வது மிகவும் அவசியமாகும் என்று அவர் கூறினார். இப்போது ஜமாஅத்துடன் எனது தொடர்புகளை அதிகமாக்க நான் முடிவு செய்துள்ளேன் என்றும் அவர் கூறினார்.
- ஒரு விருந்தினர் 25 வருடங்களாக அஹ்மதிய்யா ஜமாஅத் தனக்கு தெரியும் என்று கூறினார். அவர் தனது Boss -ன் குடும்ப நண்பர் ஆவார். அவர் ஹுஸூர் அவர்களை பலமுறை தனது நண்பரது வீட்டின் தொலைக்காட்சியில் பார்த்துள்ளார். ஹுஸூர் அவர்களை ஒரு ஒளி நிறைந்த சிறந்த மனிதராக அவர் கருதுகின்றார். நான் மனித குலத்திற்காக விரும்புவதுதான் கலீ.்.பா அவர்களின் தூதுச் செய்தியாக இருக்கின்றது என்று அவர் கூறினார்.
- அண்டை வீட்டுக்காரரான ஒரு பெண்மணி தான் திருக்குர்ஆனின் ஜெர்மன் மொழிபெயர்ப்பைப் படித்திருப்பதாகக் கூறினார். இன்று இஸ்லாம் தொடர்பாக என்ன விஷயங்கள் வெளிப்படுத்திக் காட்டப் -படுகின்றனவோ அவை இன்று ஹுஸூர் அவர்கள் கூறியவற்றிற்கு முற்றிலும் மாற்றமானவையாக இருக்கின்றன என்று அவர் கூறினார். அந்தப் பெண் திருக்குர்ஆனை படித்திருந்தால் இந்த கருத்துக்கள் திருக்குர்ஆனில் இருந்துதான் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது என்பதை அவர் உண்மைப்படுத்தினார். ஹுஸூர் அவர்கள் மிகவும் முக்கியம் வாய்ந்த ஒரு மனிதராக இருக்கின்றார். அவர்கள் நீதியை விரும்புவர்களாக இருக்கின்றார்கள். பள்ளிவாயில் கட்டப்பட்ட பிறகு நான் அந்தப் பள்ளிவாயிலைப் பார்ப்பதற்காகவும் வருவேன் என்று அவர் கூறினார்.
- ஐந்து கிறித்தவர்களைக் கொண்ட ஒரு குழு வந்திருந்தது. ஹுஸூர் அவர்கள் மிகவும் அமைதியான போற்றுதலுக்குரிய ஒரு பெருந்தகை ஆவார்கள் என்று அவர்கள் கூறினர். அவர்களுக்கு ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு மிகவும் பிடித்திருந்தது. குறிப்பாக, முஸ்லிம்களுடன் மட்டும் அல்லாமல் எல்லாரிடமும் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற அவர்களின் இந்த தூதுச் செய்தி எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இவர்களில் ஒரு நபர் உலகம் ஹுஸூர் அவர்கள் கூறியுள்ள இந்த விஷயங்களை ஏற்று நடந்தால் எல்லா பிரச்சனைகளும் தீர்ந்து விடும் என்று கூறினார். மற்றவர்களும் தங்கள் தலையை அசைத்தவாறு அவர் கூறிய இந்த விஷயத்தை உண்மைப்படுத்தினர். எவற்றை ஹுஸூர் அவர்கள் கூறினார்களோ அவற்றை நாங்கள் உண்மைப்படுத்துகின்றோம் என்றும் அவர்கள் கூறினர். அவர்கள் ஜமாஅத் உறுப்பினர்களின் கல்வியின் தரத்தை அதிலும் குறிப்பாக பெண்களின் கல்வியின் தரத்தைப் பார்த்து வியப்படைந்தனர். பெண்களுக்கு கூட அடிக்கல் நடுவதற்கான வாய்ப்பை வழங்கி அவர்கள் பெருமைப்படுத்தப்படுவதைப் பார்த்து சிறந்த தாக்கத்திற்கு அவர்கள் ஆளாகினர்.
- Management -ல் பணிபுரிகின்ற வயது முதிர்ந்த நபர் ஒருவர் தமது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு தமது தொழில் காரணமாக அதிகமாக தவறுகளைக் கண்டுபிடிக்கின்ற பழக்கமுள்ளவராக தான் இருந்ததாகக் கூறுகின்றார். ஆனால், ஜமாஅத்தின் அமைப்பு மற்றும் சுற்றுச் சூழலின் காரணமாக நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகி -யுள்ளேன் என்று அவர் கூறினார். தமது Professional வழிமுறைக்கேற்ப ஜமாஅத் எந்த அளவு செயல்படுகின்றது என்றால் அவர் இது தொடர்பாக தமது வியப்பை வெளிப்படுத்தினார். இவ்வளவு அழகிய அமைப்புடன் அவர் கருத்தில் கொள்ளப்படுவார் என்று அவர் எதிர்பார்க்கவே இல்லை. மிகவும் அமைதி நிறைந்த சுற்றுச் சூழலைப் பார்த்து அவர் மிகுந்த தாக்கத்திற்கு ஆளானார். ஒரு ஜமாஅத்திற்கு இவ்வளவு வலுவான அமைப்பும் கூட இருக்க முடியுமா? என்பதைப் பார்த்து அவர் செய்வதறியாது நின்று கொண்டிருந்தார் என்பதை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டியது வந்தது என்று அவர் கூறினார். அவர் பொதுவாக தலைவர்களை நல்ல பார்வையுடன் பார்ப்பதில்லை. ஏனென்றால், பல தலைவர்களும் தமது சக்தியை தவறாகவும் பயன்படுத்தியுள்ளனர். ஆனால், ஹுஸூர் அவர்கள் இத்தகைய ஒரு தலைவராக எனக்கு தெரியவில்லை. மாறாக, அவர்கள் மிகவும் சிறந்த போற்றுதலுக்குரிய ஒரு பெருந்தகை ஆவார். அவர்களது சொற்பொழிவின் மூலமாகவும் நான் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன் என்று அவர் கூறினார். பெண்களுக்கான ஏற்பாடும் இருந்ததைப் பார்த்து அதுவும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எதனை இவர்கள் மற்றவர்களின் முன்னிலையில் கூறுகின்றனரோ அதையே அவர்களும் செய்கின்றனரா என்பதை தெரிந்து கொள்வதற்காக நான் ஜமாஅத்துடன் நிரந்தரமாக தொடர்பு

EDITOR
MUZZAMMIL AHMAD
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 Thursday 24 NOVEMBER 2016 Issue No. 38

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

கொள்வேன் என்று அவர் கூறினார். ஹுஸூர் அவர்கள் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்பவராகவும் வாழ்க்கைக்கு தேவையான முக்கியமான விஷயங்களை எடுத்துக் கூறுபவராகவும் இருக்கின்றார்கள் என்றாலும், உலகின் பொருளாதார பேராசையின் காரணமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் போதனைகளுக்கேற்ப செயல்படுவது கடினமானதாகும் என்று அவர் கூறினார்.

- Mr. Recep Aydogan என்ற ஒரு விருந்தினர் தமது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்: நான் இங்கு சிறந்த முறையில் வரவேற்கப்பட்டேன். ஹுஸூர் அவர்கள் கூறும் வார்த்தைகள் அவர்களது உள்ளத்திலிருந்து வெளி வந்தவை போன்று தெரிகின்றது. அவர்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை எடுத்துக் கூறினார்கள். ஏற்பாடுகள் மிகவும் சிறந்த முறையில் செய்யப்பட்டிருந்தது. இந்தப் பள்ளிவாயில் முஸ்லிம்களுக்காக வெற்றியின் இடமாக நிரூபிக்கப்படும்.
- டாக்டர் கிளவன் என்ற ஒரு விருந்தினர் தமது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்கள்: ஹுஸூர் அவர்கள் மிகவும் கண்ணியத்திற்குரிய மற்றும் போற்றுதலுக்குரிய பெருந்தகை ஆவார்கள். அவர்கள் மூலமாக அமைதியும் சாந்தியும் வெளிப்படுகின்றது. அவர்கள் இங்கு வந்தது Frankenthal நகரத்திற்கு மிகப்பெரும் கண்ணியத்தைத் தருகின்றது. பெண்ணின் அந்தஸ்து தொடர்பான விஷயங்களைக் கேட்டு நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். இந்த விஷயம் தொடர்பாக இந்த அளவு என்னால் கேட்க முடிந்ததை நினைத்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்.
- மிஸ்டர் குருகா என்ற ஒரு விருந்தினர் இவ்வாறு கூறினார்: ஹுஸூர் அவர்கள் மூலமாக ஒரு சிறப்பான அமைதியின் சுற்றுச் சூழல் வெளிப்பட்டிருக்கின்றது. அவர்கள் எந்த அமைதியை நிலைநாட்ட விரும்புகின்றார்களோ உண்மையில் அவ்வாறே அவர்கள் அமைதியுடன் இருப்பதை என்னால் பார்க்க முடிகின்றது. அவர்கள் விரைவாக நடப்பதைப் பார்த்தும் கூட நான் தாக்கத்திற்கு ஆளானேன். நமக்கென்று சில உரிமைகள் மட்டும் அல்லாமல் சில பொறுப்புகளும் உள்ளன என்பதை அவர்கள் புரிய வைத்தார்கள்.

*(தொடரும்....)*

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

சுருக்கமாக, நான் கூறுவது என்னவென்றால், இப்போது நமக்கும் எதிரிகளுக்கும் இடையேயுள்ள சண்டை அதன் இறுதி எல்லையை அடைந்து விட்டது. இப்போது எவன் என்னை அனுப்பினானோ அவன் சுயமே இந்த வழக்கிற்கான தீர்ப்பைக் கூறுவான். நான் உண்மையாளனாக இருந்தால் கண்டிப்பாக வானம் எனக்காக ஒரு வலுவான சாட்சியை வழங்கும். அதன் மூலமாக உடல் நடுங்கி விடும். நான் இருபது வருட குற்றவாளியாக இருந்தால் மேலும் ஒரு நீண்ட காலக்கட்டம் வரை இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறியிருந்தால் நான் எவ்வாறு தப்பித்துக் கொள்ள முடியும்? இந்நிலையில் நீங்கள் எல்லாரும் எனது நண்பர்களாக ஆகி விட்டாலும் கூட நான் அழிந்து போகக் கூடியவனாக இருக்கின்றேன். ஏனென்றால், இறைவனின் கை எனக்கு எதிராக இருக்கின்றது. மக்களே! நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். நான் பொய்யன் அல்லன். மாறாக, நான் அநீதியிழைக்கப்பட்டவன் ஆவேன். நான் இட்டுக்கட்டி பொய் கூறுபவன் அல்லன். மாறாக, நான் உண்மையாளன் ஆவேன். நான் அநீதியிழைக்கப்பட்டவனாக இருக்கும் நிலையில் ஒரு காலம் கடந்து விட்டது. இது இன்றிலிருந்து இருபது வருடங்களுக்கு முன்னதாக இறைவன் கூறிய அதே விஷயமாகும். அது பராஹீனே அஹ்மதிய்யாவில் வெளியிடப்பட்ட விஷயமாகும். அதாவது அது இறைவனின் இந்த இல்ஹாம் ஆகும். அதாவது, உலகிற்கு ஓர் எச்சரிக்கையாளர் வந்தார். ஆனால், உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், இறைவன் அவரை ஏற்றுக் கொள்வான். மிகவும் வலுவான தாக்குதல்கள் மூலமாக அவரது உண்மையை வெளிப்படுத்துவான். இது எப்போது வந்த இல்ஹாம் என்றால், அப்போது என் தரப்பிலிருந்து எந்த அழைப்பும் விடுக்கப்படவில்லை. என்னை மறுப்பவரும் கூட எவரும் இருந்ததில்லை. முன்னறிவிப்பின் வடிவில் மட்டுமே இந்த சொற்கள் இருந்தன. அதனை எதிரிகளான மவ்லவிமார்கள் நிறைவேற்றி விட்டனர். எனவே, அவர்கள் விரும்பியதை செய்தனர். இப்போது இந்த முன்னறிவிப்பின் இரண்டாவது சொற்றொடர் வெளிப்படப் போகும் நேரம் இதுவாகும். அதாவது, இறைவன் அவரை ஏற்றுக் கொள்வான். மிகவும் வலுவான தாக்குதல்கள் மூலமாக அவரது உண்மையை வெளிப்படுத்துவான்.

***(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 188-190)***

(குத்பா தொடர்ச்சி...)

அவரது மகள் நுஸ்ரத் ஆயிஷா சாஹிபா கூறுகிறார்: எனது தாயார் மிகவும் முன்னுதாரணமான தாயார் ஆவார். எனக்காகவும் எனது குழந்தைகளுக்காகவும் அதிகமாக துஆ செய்யக் கூடியவர் ஆவார். எந்த பிரச்சனை வந்தாலும் உடனே அம்மாவுக்கு ஃபோன் செய்து விட்டு கவலையற்று இருந்து விடுவேன். அல்லாஹ்வின் அருளால் அப்பணி எளிதாகியும் விடும். என்னிடம் நீ நன்றி ஸஜ்தா செய் என்று கூறுவார்கள். எண்ணற்ற பணிகளுக்கு மத்தியில் என்னை பராமரிப்பதிலும் மிக முக்கிய பங்கு வகித்தார். பரந்த துணிச்சல் விவேகம் கொண்டவர். என்னை தந்தையாகவும் தாயாகவும் இருந்து பராமரித்தார். எனது மகளுக்கு சரியாக தொண்டாற்ற முடியவில்லையே என்ற உணர்வு எப்போதாவது அவர்களுக்கு ஏற்பட்டால் எந்த மனிதனது நேரங்கள் படைப்பினங்களுக்கு சேவை செய்வதற்காக செலவழிக்கப்படுகிறதோ அந்த நேரத்தின் முக்கியத்துவம் மிக அதிகமானது. அல்லாஹ் எனது மக்களின் பணிகளை தானே செய்வான் என்பார்கள். எப்போதும் என்னிடம் கூறுவார்கள். உமது தாய்வழிப் பாட்டனார் இரு விஷயங்களை தனது சந்ததிகளுக்கு போதித்தார்கள். ஒன்று, அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இன்னொன்று கிலாஃபத்துடன் தொடர்பு அந்த போதனையையே நான் உங்களுக்கு செய்கிறேன். எப்போதும் அல்லாஹ்வின் மீது தவக்குல் வையுங்கள். கிலாஃபத்துடன் நீங்களும் உங்கள் சந்ததிகளும் இணைந்திருங்கள்.

கிலாஃபத்துடன் இவருக்கு அளவு கடந்த அன்பு இருந்ததாக எழுதியிருக்கிறார். நோயுற்று வெண்டிலேட்டர் பொருத்தப்பட்ட நிலையிலும் தொழுதார். எனது மொபைல் ஃபோனில் திருக்குர்ஆன் ஓதினார். பிறகு பேப்பரும் பேனாவும் கேட்டார். காலத்தின் கலீஃபாவுக்கு மீண்டும் மீண்டும் துஆவுக்காக அனுப்பிக் கொண்டே இருக்கவும் என்று எழுதினார்.

அவர் கூறுகிறார்: நான் எனது அம்மாவை மிகவும் அளவில்லாத கலப்பில்லாத ஜமாஅத் உணர்வுடன் நிறைந்தவராகவே கண்டேன். ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் அம்மாவின் சேவைகள் ஒரு சிறு அறையிலிருந்து ஆரம்பமானது. ஒருபுறம் நாற்காலியும் மற்றொருபுறம் ஒரு மேஜையும் இருக்கும். தொண்டுணர்வின் ஆர்வமானது முதலில் ஒரு Labour Ward –ஐயும், பிறகு மகப்பேறு துறைக்காக Independent Building –யும் உருவாக்கியது. அதை அவரும் அவருடன் பணி செய்பவர்களும் ஆர்வத்துடன் ஒரு வெற்றிகரமான Unit ஆக மாற்றினார்கள். பிறகு Medical Equipment வாங்குவதற்கு தானே லாஹூர் செல்வார். நானும் சில பயணத்தில் அவருடன் இருப்பேன். ஒவ்வொரு கடையிலும் Quotation வாங்குவார். ஜமாஅத் பணத்தை மிச்சப்படுத்த முயற்சி செய்வார்.

அவர் கூறுகிறார்: ஒருமுறை 15 நாட்களுக்காக எனது மகள் ஆலியா ரப்வா வந்திருந்தார். அவரையும் தனது துறையின் பணியில் இணைத்துக் கொண்டார். Typing –ல் உதவி செய்யுமாறு கூறினார்கள். அவரது Typing நல்ல Speed ஆக இருந்தது. ஜமாஅத்திற்கு தொண்டு செய்வது ஒரு நற்பேறாகும். இந்த நற்பேற்றில் பங்கு பெறு என்று கூறினார். தமது பணியில் அவ்வளவு உற்சாகம் இருந்தது. தமது நோயின் கடைசி நாட்களிலும் மருத்துவமனையின் பெயரைக் கேட்கும்போது முகத்தில் புன்னகை வரும். மயக்கத்தின் நிலையில் கூட ஆப்பரேஷன் தியேட்டர் மற்றும் மெஷின்களை உருவாக்கும் கம்பெனியின் பெயரைக் கூறி வந்தார். அதனைக் கேட்டு ஆங்கிலேயே நர்ஸ்களும் வியந்தனர். என்னிடம் சிலர் என்ன கூறுகிறார் என்று கேட்டனர். அல்லாஹ்விடம் அளவற்ற தவக்குல் இருந்தது. நோயின் நிலையில் சில நாட்களுக்குப் பேச முடியவில்லை. Speaking Volve பொருத்திய போது மகளே அல்லாஹ்வின் பக்கம் விட்டு விடு என்றார்கள். நான் அழ ஆரம்பித்தால் கண்களால் அல்லாஹ்வின் பக்கம் சைக்கினை செய்தார்கள். அல்லாஹ் இவரது ஒரே மகளுக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக! அவரது அம்மா செய்த போதனைகளையும் எதிர்பார்ப்புகளையும் முழுமையாக நிறைவேற்ற வாய்ப்பை அவருக்கு வழங்குவானாக! அல்லாஹ் அம்மகளை தனது பாதுகாப்பில் வைப்பானாக! அவரது சந்ததிகளையும் பாதுகாப்பில் வைப்பானாக! மர்ஹூமாவின் தகுதியை உயர்த்துவானாக! அல்லாஹ் ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் தொண்டு செய்யக் கூடியவர்களை பற்றுடன் ஜமாஅத்திற்கு தொண்டாற்றக்கூடியவர்களாக ஆக்குவானாக! அல்லாஹ் கிலாஃபத்திற்கு கட்டுப்படும் இன்னும் பல டாக்டர்களை ஜமாஅத்திற்கு வழங்குவானாக! இருக்கக் கூடியவர்களுக்கு அல்லாஹ் இப்பணியில் வளர்ச்சியைத் தருவானாக! இந்த இருவருக்கும் ஜூமுஆ தொழுகைக்குப் பிறகு ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad